பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
JAFFNA.
T: Phone: 23794

# உதயன்

விலை ரூ2/50

செல்லையா
சிவபாதலிங்கம்
வைரநல் நகை
வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில்செய்து
கொடுக்கப்படும்.

சுடர்: 4 சுக்கில ஒளி ஆடி மீ 29 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 10 (13 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 215

## புதுடில்லி யோசனைகள் பற்றி முடிவு செய்ய முன்னர்

# பல கட்சிக் கருத்துக்களையும்

# ஜனாதிபதி ஆராய்கிறார்!

## 3 நாள் விவாதம் பற்றிய "ஹன்சார்ட்டை" நேற்று முழுவதும் உன்னிப்பாகப் படித்தார்

கொழும்பு, ஆகஸ்ட் 13

அமைதிப்படை விலகல் விவகாரம் தொடர்பான புதுடில்லி யோசனைகள் குறித்து இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னர், பல கட்சியினரும் தெரிவித்த கருத்துக்களை ஜனாதிபதி பிரேமதாஸா ஆராய்ந்து வருகிறார்.

புதுடில்லி யோசனைகள் குறித்து நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மூன்று நாள் விவாதத்தின் முழுத் தொகுப்பும் அடங்கிய "ஹன்சார்ட்டை" அவர் நேற்று முழுவதும் உன்னிப்பாகப் படித்தார்.

புதுடில்லி யோசனைகள் குறித்து நாடாளுமன்றத்தில் குறிப்பாக எதிர்க்கட்சியினர் வெளியிட்ட அபிப்பிராயங்கள் குறித்து தமது ஆலோசகர்களுடன் அவர் நேற்று ஆலோசனை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புதுடில்லி யோசனைகள் குறித்து நாடாளுமன்ற விவாதத்தில் சுயாதீனமாக தமது கருத்துக்களை வெளியிட ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆளும் கட்சி எம்.பிக்கள் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் நாடாளுமன்றத்திலும் தெரிவித்த கருத்துக்கள்—

எதிர்க்கட்சியினர் நாடாளுமன்ற உரைகளில் வெளியிட்ட அபிப்பிராயங்கள்—

கடந்த திங்கட்கிழமையும் வெள்ளிக்கிழமையும் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டங்களில் அமைச்சர்கள் கூறிய ஆலோசனைகள்-

இவை அனைத்தையும் நன்கு கவனத்தில் கொண்டு நன்கு பரிசிலனை செய்த பின்னரே ஜனாதிபதி தமது இறுதி முடிவை வெளியிடுவார் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

அமைதிப்படைத் துருப்புக்களை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் அளவில் வாபஸ் பெற்றுக்கொள்ள இந்தியாவும்—

அடுத்து வரும் செப்டம்பர் மாதத்தில் படையை விலக்கிக்கொள்ளவேண்டும் என இலங்கையும் கருத்து தெரிவித்து வருவது தெரிந்ததே. (உ-21)

## அரச கட்டடங்களுக்கு அம்பாறையில் தீ வைப்பு!

அம்பாறைப் பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் அரசாங்கத்துக்குச் சொந்தமான பல உடைமைகள், கட்டடங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டிருக்கின்றன.

உதவி அரச அதிபர் அலுவலகம் ஒன்று, கிராமசேவகர் அலுவலகங்கள் இரண்டு, ஐந்து உபதபால் கந்தோர்கள், இரு கமநல சேவை நிலையங்கள், இரண்டு போக்குவரத்துச்சபை பஸ்கள்உட்பட பல உடைமைகள் இனந்தெரியாத சந்தேக நபர்களினால் எரிக்கப்பட்டன. (உ-21)

## அசங்கமய பொலீஸ் அதிகாலை தாக்கப்பட்டது!

மட்டக்களப்பு, ஆகஸ்ட் 13

காலி மாவட்டத்தில் உள்ள அசங்கமய பொலீஸ் நிலையம் நேற்று அதிகாலை தாக்குதலுக்கு இலக்கானது.

இந்தத் தாக்குதலில் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி உயிரிழந்தார்: 4 பொலீஸார் காயமடைந்தனர். பொலீஸ் நிலையத்திலிருந்த ஆயுதங்கள் அபகரிக்கப்பட்டன. (உ-21)

### கேரதீவு - சங்குப்பிட்டி

## புதிய பாதைச் சேவை இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 13

கேரதீவு — சங்குப்பிட்டி கடல் இணைப்பு புதிய பாதைச் சேவை ஒன்று இன்று நண்பகல் 12 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட இருக்கிறது.

வடமாகாண பெருந்தெருக்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் திரு. பாலேந்திரா பாதைச் சேவையை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

இவ் வைபவத்தில் பிரதம பொறியியலாளர் திரு. என். செல்வரத்தினமும், பொறியியலாளர் திரு. ஏ திசவீரசிங்கமும் கலந்து கொள்வர்.

10 தொன் பாரம் ஏற்றிய லொறி மற்றும் மினிபஸ்களை இப்பாதையில் ஏற்றிச் செல்லலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

பூநகரி ப.நோ.கூ. சங்கமே இச் சேவையை நடத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### மாலைதீவு சதிமுயற்சி வழக்கு:

## 16 பேருக்கு மரணதண்டனை! 56 பேருக்கு சிறைவாசம்!

மாலே ஆகஸ்ட் 13

மாலைதீவு சதிமுயற்சிவழக்கு விசாரணை நேற்று முடிவடைந்தது.

நான்கு மாலைதீவுப் பிரசைகளுக்கும் 12 இலங்கைத் தமிழர்களுக்குமாக மொத்தம் 16 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

ஏனைய 56 இலங்கைத் தமிழருக்கும் 17 முதல் 38 ஆண்டுகள் வரையான சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதி இச்சதிமுயற்சிமேற்கொள்ளப்பட்டது. இந்திய இராணுவம் விரைந்து சென்று சதியை முறியடித்து, அதில் ஈடுபட்டவர்களை கைது செய்தது.

மொத்தம் 73 பேர் கைது செய்யப்பட்டனர், அவர்களில் 68 பேர் இலங்கைத் தமிழர்கள் ஆவர்.

இச்சதி முயற்சிக்கு தலைமை வகித்த மாலைதீவு வர்த்தகர் லுப்திக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

நேற்று நீதிமன்ற தீர்ப்பு (8-ஆம் பக்கம் பார்க்க)

### சார்க் அமைப்பின்

## வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு மாத இறுதியில்

சார்க் அமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டினை இம் மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் கூட்டக்கூடிய நிலை உருவாகி வருவதாக சார்க் அமைப்புச் செயலாளர்நாயகம் அப்துல் அஹ்சன் நம்பிக்கை தெரிவித்தார்.

இது சம்பந்தமான கலந்துரையாடல்கள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சார்க்அமைப்பு மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதில் பாகிஸ்தான் தீவிரமாக இருந்து வருகிறது.

இம்மாநாடு நடத்தப்படுவதை இலங்கையும் தீவிரமாக எதிர்க்கவில்லை.

"சார்க் அமைப்பு அரசியல் ரீதியானது ஒன்றல்ல. அதனால் இருதரப்பு பிரச்சினைகளை இம்மாநாட்டில் விவாதிக்க முடியாதிருக்கிறது"—இப்படி செயலாளர்நாயகம் அப்துல் அஹ்சன் தெரிவித்தார். (உ-எ)

## கொழும்பில் கடந்த மாதம் விபத்தில் சிக்கி 693 பேர் பலி!

கொழும்பு. ஆக. 13

கொழும்பு மாநகரில் கடந்த மாதம் மட்டும் வீதி விபத்துக்களில் சிக்கி 693 பேர் உயிரிழந்தனர்.

இது நாள் ஒன்றிற்கு சராசரியாக 23 பேர் வீதமாக இருந்தது என்று கொழும்பு போக்குவரத்துப் பொலீஸ் பிரிவினால் விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## வல்வை வேம்படி பகுதியில் இளைஞர் சூட்டுக்குப் பலி!

வல்வெட்டித்துறை, ஆக 13

வல்வெட்டித்துறை வேம்படிப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், சூட்டுக்கு இலக்காகி வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கொண்டல்கட்டைப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான வேலும்மயிலும் செல்வச்சந்திரன் (வயது 26) என்பவரே உயிரிழந்தவராவார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, படுகாயமடைந்த நிலையில் வல்வை இந்திராணி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் அங்கிருந்து மந்திகை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு மரணமானார். [உ-160]

### அரசின் அறிவிப்பு இது:

## தற்பாதுகாப்புக்கு மக்கள் கொலையும் செய்யலாம்!

### குற்றவியல் சட்டம் குறித்து விளக்கம்

கொழும்பு, ஆக. 13

பொதுமக்கள் தங்களையோ, தங்கள் சொத்துக்களையோ பாதுகாக்க குற்றவியல் சட்டத்தின் கீழ் முடியும் என்று அரசாங்கம் நேற்று அறிவித்தது.

தாக்குதல்களின் விளைவாக தனக்கு மரணமோ, பாரதூரமான உடற்தீங்கோ ஏற்படக்கூடிய பயம் எழக்கூடிய சூழ்நிலைகளில் தற்பாதுகாப்பு உரிமையைப் பிரயோகித்து திருப்பித் தாக்குவதற்கு அல்லது மரணத்தை விளைவிப்பதற்கு அல்லது அவர்களுக்கு வேறு ஏதாவது வகையில் ஊறு விளைவிப்பதற்கு தற்பாதுகாப்பு உரிமை இடமளிக்கிறது என்று அரசாங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையடித்தல், இரவில் வீடு உடைத்தல் ஆகிய தொடர்பான குற்றங்களைப் புரிவோரைக் கொலை செய்வதற்கான உரிமையும் பொதுமக்களுக்கு குற்றவியல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது என்றும் அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது(உ-எ)

### முச்சந்தி முரளி



மக்கள் மட்டத்திற்கு அதிகாரத்தைப் பரவலாக்கிறது என்டு சொல்றது இதைத் தானோ......?

## யாழ். பாடசாலைகளை நாளை திறக்கப் பணிப்பு

யாழ். மாவட்டப் பாடசாலைகளை நாளை திங்கட்கிழமை திறக்கும்படி யாழ். கல்வித் திணைக்களத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான பணிப்புரை யாழ். கல்வித் திணைக்களத்துக்கு நேற்றுக் கிடைத்ததாகவும் —

இந்தப் பணிப்புரைக்கு அமைய சகல பாடசாலைகளையும் நாளை முதல் திறக்கும்படி யாழ். கல்வித் திணைக்களம் கேட்டிருப்பதாகவும் கல்வித் திணைக்கள உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

பாடசாலைகள் நாளை திறக்கப்பட்டாலும் மறு அறிவித்தல்வரை மாணவர்களுக்கு இலவச மதிய போசனம் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டாம் என்று யாழ். கல்வித் திணைக்களத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது. (உ-9)

### சுபநேரம்

[13 - 8 - 1989]

ஆடி 29 — ஞாயிற்றுக்கிழமை

நக்ஷத்திரம்: மூலம்

சுபநேரம்:

09-05 முதல் 10-35 வரை

ராகுகாலம்:

04-35 முதல் 06-05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

ஏகாதசி விரதம்

### பயிலுநர் ஆசிரியர் தெரிவு:

## யாழ் மாவட்டத்தில் எழுத்து பரீட்சை ஒத்திவைப்பு

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 34 பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சைகள் முன்னர் அறிவிக்கப்பட்டபடி செவ்வாய் 15ஆம் திகதி நடைபெறமாட்டாது. இப்பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ். கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் இந்த ஆசிரியர் நியமனங்களை அடுத்த மாதம் முதலாம் திகதி வழங்கக் கூடியதாக ஆசிரியர் தெரிவு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும்படி யாழ். கல்வித் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது. [உ-9]

## செய்திச் சாரம்

### நகரில் இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம். ஆக. 13

யாழ்ப்பாணம், பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக நேற்றுக்காலை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் காரைநகர் அருகம்புலம் வாசியான மகேந்திரன் நந்தகுமார் (வயது 28) என்பவர் ஆவார். [ஒ-9]

### விளானிலும்

யாழ்ப்பாணம், ஆக. 13

விளான் பகுதியிலும் ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் சங்கானை மேற்கு பண்டத்தரிப்பைச் சேர்ந்த துரைசிங்கம் விஜயகுமார் [வயது 30] என்பவர் ஆவார். (ஒ-9)

### கோவில் வீதியில் இளைஞர் சடலம்

யாழ்ப்பாணம், ஆக. 13

நேற்றிரவு ஏழு மணியளவில் யாழ். கோவில் வீதியில் - கைலாசப் பிள்ளையார் கோவிலிற்கு அண்மையில்—இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

சுமார் 22 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலம் நேற்றிரவு வீதியோரத்தில் கிடக்கக் காணப்பட்டது.

கொல்லப்பட்டவர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை. (உ-9)

### சித்தன்கேணியில் மோதல் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக. 13

நேற்றுக்காலை 10-30 மணியளவில் சித்தன்கேணிக்கு அண்மையில் — வழக்கம்பரை பகுதியில் — மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

### சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஆக. 13

இனந்தெரியாத நபர்களால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட வாலிபர் இரண்டாம் நாள் சடலமாக மீட்கப்பட்டார்.

இலுப்படிச்சேனையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இறந்தவர் எஸ் நந்தகுமார் (வயது 21) என அடையாளம் காணப்பட்டார். (ஒ-21)

### ராஜீவுடன் முதல்வர் பேச்சு!

புதுடில்லி, ஆக. 13

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் நேற்று பிரதமர் ராஜீவ்காந்தியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார். (உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

EN தொடர் இலக்கமுள்ள A50 கார் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: P. பராராஜசிங்கம் Station Lane, Chavakachcheri. (11792)

மயிலிட்டியில் 2 பரப்புக் காணி (மடத்திற்புலம்) மயிலிட்டி திருப்பூர்லேனில் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. தெய்வச்சந்திரன் தெனியம்பை வல்வெட்டித்துறை: (1382)

26 கேஜ் 9 அடி 16, 26 கேஜ் 8 அடி 110, 24 கேஜ் 6 அடி 115 தகரங்களும் 26 கேஜ், 8, 7, 3, 4 அடி தகரம் வேலிக்கும் கூரைக்கும் பாவிக்கலாம். அத்துடன் முதிரை, தேக்கு அலுமாரியும் உடன் விற்பனைக்கு உண்டு. சி. கந்தசாமி, நவாலிவடக்கு, நாச்சியார் கோவிலடி, மானிப்பாய். (1503)

A 40 இல. C V 1405 வான் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு; எந்நேரமும் பார்வையிடலாம்; பி; இராசேந்திரம், வறணி, காங்கேசன் துறை. (1377)

பிள்ளைகளுடைய Cot, Melodica வேறு வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 127, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (1509)

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட Honda மோட்டார் சைக்கிள்கள் [Chaly, C-90, M B-5] விற்பனைக்கு உண்டு: Our Lady Stores, 601, Hospital Road, Jaffna: (1387)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத் தளபாடங்கள் அனைத்தும் Fan, Radio மற்றும் மின்சார உபகரணங்கள் குத்துவிளக்குகள், சில்வர் பொருட்கள் Type Writer, சிங்கர் தையல் மெஷின் C B 125 மற்றும் பல மலிவாக விற்பனைக்குண்டு: Supeka, 343, பருத்தித்துறை வீதி, அரசடி, நல்லூர். (1510)

புத்தம் புதிய டீபிறீசர்கள் பல அளவுகளிலும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நோத் அயர்ண் என்ஜினியர்ஸ் இல. 95, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (கன்னாதிட்டி காளி கோவிலுக்கு முன்பாக) (1511)

### வீடு வளவு விற்பனைக்கு

நல்லூர் கல்வியங்காடு 3ஆம் கட்டை மடத்தடி ஒழுங்கையில் சகல வசதிகளும்கொண்ட புதிய வீடும் அதனுடன் சேர்ந்த ஒன்றரைப் பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: அங்கலின் றெக்ஸ் ஸைரல்ஸ், 43, நவீன சந்தை, யாழ்ப்பாணம்: (1385)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் Hybro புறொயிலர் குஞ்சுகள் 14 ஆம் திகதி திங்கட்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க: சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (1375)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Cobb) இன புறொயிலர். குஞ்சுகள் (Dekalb) இன பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும்; இல. 9 கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (1388)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள், Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3264)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரக தோஷம் முதலான மாந்திரீக விடயங்கட்கு நாடுங்கள் 'சக்தி சரவணா' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிட மட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரைமாந்திரீகநிபுணரும்) 210கஸ்தூரியார் வீதி, (யாழ்/இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்; வியாழக்கிழமை விடுமுறை. (9348)

### MUSIC

Piano and Accordian-Lessons for Females Mrs Thomas St. Mary's Road' Sillalai: (1058)

### தவறிவிட்டது

மிருநாலினி ஏகாம்பரம் அடையாளஅட்டை இலக்கம் 68 401759 X தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (11723)

### WANTED BRIDEGROOM

Vellala Christian Parents Seek for only Son Mercantile Executive in Colombo 26, Fair 5' 9''. Monthly Salary Rs. 15,000/- A Suitable Partner below 24 English speaking send full Particulars with Photograph No: 82, C/o UTHAYAN, JAFFNA (11798)

## புனித லிகோரியார் தேவாலய உற்சவம்

பச்சிலைப்பள்ளி ஆக 13

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் ஜுலை 24ஆம் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட்முதலாம் திகதி திருப்பலிபூசை, திருச்சொரூப பவனியுடன் பூர்த்தியானது.

நவநாள் ஆராதனைகள் வணபிதா கருணாகரர் அடிகளார் அவர்களால் சிறப்பாக நடத்தப்பட்டது. (க-117)

## கருத்தரங்கு

'வடக்கில் தொடர்ந்து நிலவும் இன்றைய குழப்பமான நிலையில் பெண்களின் நிலைமை'' என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆதரவில் நாளை 14ஆம் திகதி உரும்பராயில் நடைபெற உள்ளது

இந் நிலையத்தின் இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில கருத்தரங்கு நடைபெறும். (இ-3)

## மிருதங்க சங்கீத சாஸ்திரம்

யாழ்ப்பாணம், ஆக.13

இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் மிருதங்க விரிவுரையாளர் திரு. அ. நா. சோமாஸ்கந்தசர்மா எழுதிய 'மிருதங்க சாஸ்திரம்' என்ற நூலின் வெளியீட்டுவிழா மேற்படிகழகத்தில் நாளை திங்கட்கிழமை பகல் 1மணிக்கு நடைபெறும்.

நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கா: சிவத்தம்பி விழாவுக்குத் தலைமைவகிப்பார்: (க)

## இந்து இளைஞர் பேரவை கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 13

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்றுஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு: வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெறும்:

கூட்டத்தில் உலக உயிர் பாதுகாப்பு வாரம், நல்லைகதிர்காம உற்சவச் சிறப்புக் கூட்டம் நடத்தல், கிராமரீதியில் இந்து இளைஞர் மன்றங்கள் ஸ்தாபித்தல்பற்றி ஆராயப்படும் என்று பேரவையின் உபசெயலாளர் திரு. கி. சி. வரதராசா தெரிவித்தார் (இ)

---

வாகன உரிமையாளர்களுக்கு:

## ★ ஒரு நற்செய்தி!

### புன்னாலைக்கட்டுவன் சேவிஸ்ரேசன்

மின்சாரம் இல்லாத போதும் ஜெனரேட்டர் மூலம் 40 நாட்களாக வேலை நடைபெறுகின்றது.

உரிமையாளர்
மு. வரதராசன்

(1515)

---

## நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 1936 - 06 - 26

●●●

உதிர்வு: 1989 - 07 - 30

### திருமதி பாக்கியமலர் மாசிலாமணி

உங்கள் அன்பான புன்சிரிப்பாலும், பண்பான பேச்சாலும், பணிவான நடத்தையாலும் எங்கள் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே! எங்கு சென்றாய்? போகும்போது மீளமாட்டேன் என ஒரு வார்த்தை தான் சொன்னாயா? காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பாயென இருந்தோம். காலன் உன்னைப் பறித்தானே! நீங்கள் சென்றாலும் நீங்கள் விட்டுச் சென்ற பாசம் எங்களை விட்டு எப்போதும் நீங்காது. எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில்கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்களை எக்கணமும் மறவோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். 1989 - 08 - 14 திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், தகப்பன், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள்.

M. S. மாசிலாமணி,
கலைமகள் வீதி, கல்வியன்காடு,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (1513)

---

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 25-06-1913

●

உதிர்வு: 15 07-1989

அமரர்

### திரு. ஐயாத்துரை நடராசா

(ஓய்வு பெற்ற — C. T. B. ஊழியர்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்புடன் எங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கி எமக்கு வழி காட்டிய குலவிளக்கே!

நீங்கள் எங்கு சென்றாலும் நீங்கள் விட்டுச்சென்ற அன்புப்பாசம் எங்களை விட்டு ஒரு போது மறைய மாட்டாது. தங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

13.08 1989 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் 14.08 89 திங்கட்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார். உறவினர். நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோப்பாய் வீதி.
உரும்பராய் தெற்கு.
உரும்பராய். (1514)

---

## வல்வைச் சம்பவங்களை விசாரிக்கத் தெரிவுக் குழு

### நாடாளுமன்றத்தில் கோரிக்கை

கொழும்பு, ஆக. 13

வல்வெட்டித்துறையில் இம்மாதம் இரண்டாம் திகதி நடந்த சமபவங்கள் குறித்து விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றைநியமிக்க வேண்டும்.

ஈழவர் ஜனநாயக முன்னணி எம். பியான திரு: ஜி. சவுந்தரராஜா நாடாளுமன்றத்தில் பேசுகையில் இவ்வாறு கோரினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு - கிழக்குப்பகுதியில் வன்செயல்கள் அதிகரித்துவந்துள்ளன-

எல்லாவற்றுக்கும் உச்சமாக ஆகஸ்ட் 2இல் வல்வெட்டித்துறைச் சம்பவங்க அமைந்தன;

வல்வெட்டித்துறைச் சம்பவங்கள் துக்ககரமானவையும் அதிர்ச்சி தருவனவாகவும் உள்ளன.

இச்சம்பவங்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 70க்கும் அதிகமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டன. ஆயிரக் கணக்கானோர் வீடிழந்து நிர்க்கதியடைந்தனர்.

இதுபற்றிவிசாரித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறோம்.

இப்படி திரு. சௌந்தரராஜா சொன்னார். (அ எ)

## பரிசோதகர் மீள நியமனம்

யாழ்ப்பாணம், இனிதெரிசி ாவட்டங்களில் பதிவைந்து சுகாதாரப் பரிசோதகராகப் பின்வருவோர்:-

திருவாளர்கள்;- எஸ். இர. ஜவரோதயம் - கொடிகாமம், எஸ்; நவரத்தினம் - கைதடி- ஆர். எல். சேவியர் - கிளிநொச்சி, கே. ஜராஜசிங்கம் அச்சுவேலி, கே. பேரின்பநாயகம் - புத்தூர், கே.கந்தையா- வட்டுக்கோட்டை. கே; தங்கவேலாயுதம் - அல்வாய், கே. இரத்தினசபாபதி - நெல்லியடி, எம். சிவஞானசுந்தரம்- செம்பியன்பற்று, வீ. இரத்தினம் - இரிமலை, கே. இரத்தினம் - தெல்லிப்பளை, ஆர். ஏ: ஞானசேகரம் - பாடசாலை சுகாதாரச் சேவை, பி; கந்தையா அச்சுவேலி; எஸ். இராசநாயகம் பிள்ளை - அல்லைப்பிட்டி, எம். இராசதுரை- புங்குடுதீவு. (த-18)

---

# கேள்வி அறிவித்தல்

### பிரதேசக்கல்வித்திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்.

### ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆந் திகதி (25 - 08 - 89) முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு, கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டு வேலைத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி (22 - 08 -1989) பிற்பகல் 2.00 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக ரூபா ஐம்பதும் (ரூபா 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (ரூபா 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி (25 - 08 - 1989) பிற்பகல் 2.00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறுநிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின் படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

செல்வி தி. பெரியதம்பி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்:

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
11 - 08 - 1989

| | பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1. | யா/நெல்லியடி ம. ம. வி. | மூன்று மாடிக் கட்டிடம் விஞ்ஞான கூடம் 90'/25' | 1,600,000.00 |
| 2. | யா/உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி | இரு மாடிக் கட்டிடம் 90'/25' (இரு கட்டிடங்கள்) | 1,600,000.00 |
| 3. | யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' விஞ்ஞானகூடம் | 1,600,000.00 |
| 4. | யா/உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி | மூன்று மாடிக் கட்டிடம் விஞ்ஞான கூடம் 90'/25' | 1,600,000.00 |
| 5. | யா/வயாவிளான் ம ம வி. | பெருந்திருத்த வேலைகள் | 800,000.00 |
| 6. | யா/புலோலி மெ. மி. த. க. பாடசாலை | தண்ணீர் தாங்கி 2000 கலன்கள் | 150,000.00 |
| 7. | யா/உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' | 1,600,000.00 |
| 8. | யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' | 1,600,000 00 |
| 9. | யா/நெல்லியடி ம. ம. வி. | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' | 1,600,000.00 |
| 10. | யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பா. | மூன்று மாடிக் கட்டிடம் 90'/25' | 1,600 000.00 |
| 11. | யா/வயாவிளான் ம. ம. வி. | மலசல கூடம் அமைத்தல் | 150,000.00 |
| 12. | யா/வயாவிளான் ம. ம. வி. | விவசாய கூடம் 30'/20' | 150,000,00 |
| 13. | யா/நீர்வேலி றே. க. த. க. பாடசாலை | இருமாடிக் கட்டிடம் 70'/20' | 800,000.00 |
| 14. | யா/ஹாட்லிக் கல்லூரி | சுற்றுமதில் 2000 அடி | 400,000 00 |
| 15. | யா/வதிரி திரு. இருதயக் கல்லூரி | சுற்றுமதில் 500 அடி மனையியற் கூட திருத்தம் | 150,000.00 |
| 16. | யா/புனித சார்ள்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம் | மூன்று மாடிக் கட்டிடம் 70' 25' | 1,200,000.00 |
| 17. | யா/பலாலிவடக்குத. த. பா. | விஞ்ஞான கூடம் 40'/20' | 250,000 00 |
| 18. | யா/எழுதுமட்டுவாள் கணேச வித்தி. | விஞ்ஞான கூடம் 40'/20' | 250,000.00 |
| 19. | யா/வட்டு. திருஞான-சம்பந்தர் வித்திய சாலை | விஞ்ஞான கூடம் 40'/20' | 250,000.00 |

[சி-3285]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

ஊனுடைய எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

**பொருள்:**

உணவும் உடையும் எஞ்சி நிற்கும் மற்றவையும் எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை; மக்களின் சிறப்பியல்பாக விளங்குவது நாணுடைமையே ஆகும்

உதயன்

இல 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
22073
யாழ்ப்பாணம்.
13 - 08 - 1989
த. பெ. இல. 38

# மாற்றமுறுத் தொடரா?

அரசாங்கத் திணைக்களங்களில் இருந்து தமிழர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் சடிதங்கள் தனிச் சிங்களத்தில் தான் வருகின்றன. தமிழ்மொழி உபயோகத்தை உடன் நடைமுறைப்படுத்துங்கள். தமிழ்க் கடிதங்களுக்கு அந்த மொழியிலேயே பதில் அனுப்புங்கள்.

இந்தக் கோரிக்கை வழமையாக வருவது போன்று, மக்களிடமிருந்து வரவில்லை. தமிழ் மக்கள் சார்ந்த சங்கங்கள் அல்லது அமைப்புகளிடம் இருந்தும் வரவில்லை. போக்குவரத்துத்துறைத் துணை அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமியிடம் இருந்து வந்திருக்கிறது.

பொது நிர்வாக அமைச்சர் திரு. யு. பி விஜேக்கூனுக்கு இது சம்பந்தமாக அவர் சடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார். தமிழ்மொழி உத்தியோக மொழியாக்கப்பட்ட பின்னரும், நடைமுறையில் அதற்குரிய அந்தஸ்து வழங்கப்படாமைக்கு பொதுநிர்வாக அமைச்சே பொறுப்பு எனவும் திரு. செல்லச்சாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ்மொழி விவகாரத்தில் அரசாங்கம் அதன் அமைச்சுகள், அதிகாரிகள் எவ்வளவு அசமந்தமாக இருக்கிறார்கள் என்பது இப்போது உள் வீட்டிலிருந்தே வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டுள்ளது!

தமிழ்மொழி வடக்கு - கிழக்கின் நிர்வாக மொழியாக்கப்பட்டதும், நாடளாவிய ரீதியில் தமிழ்க் கடிதங்களுக்குத் தமிழில் பதில் அனுப்ப வசதி செய்யும் முகமாக தமிழ்மொழி விசேட சட்டம் அமுல் செய்யப்பட்டதும் 1966 ஆம் ஆண்டில். தமிழ்த் தேசிய மொழியாக்கப்பட்டது 1972 இல். தமிழும் இந்த நாட்டின் உத்தியோக மொழிகளில் ஒன்று எனச்சட்டம் இயற்றப்பட்டும் ஒன்றரை ஆண்டுகள் கழிந்துவிட்டன.

ஆனால், சிங்கள அகர வரிசைகளையே கண்டிராத தமிழ் மக்களுக்கு, தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு அரசாங்கத் திணைக்களங்கள் தனிச்சிங்களத்தில் சடிதம் முதி வருகின்றன. அந்தத் தனிச் சிங்களக் கடிதங்களைப் புரிந்து கொள்ளவும் விளங்கிக் கொள்ளவும் தமிழ் மக்கள் நடைமுறையில் அனுபவிக்கும் சிரமங்கள் எவருக்குமே புரியக் கூடியவை. அதனால் அவர்களது முக்கிய அலுவல்கள் தாமதப்படுவதும், தடங்கல்படுவதும் சாதாரணமாகி விட்டது.

ஆனால் இதனைப் புரிந்து கொள்ளாதவர்கள் போல, அரசாங்க அமைச்சர்களும் அதிகாரிகளும் தமிழ்மொழி உபயோகத்தை நடைமுறையில் புறக்கணித்து வருகின்றனர். அதற்கு வேண்டிய நிர்வாக இயந்திரத்தை உண்டாக்க விருப்பம் இன்றியும், அக்கறை இன்றியும் செயற்படுகிறார்கள். அசமந்தம் காட்டுகிறார்கள்.

அரசாங்கத் திணைக்களங்கள் தமிழ் மக்களுடன் சிங்களத்தில் தொடர்பு கொள்வது அவர்களை அவமானப்படுத்தி முகத்தில் அறையும் செயலாகும். அது மட்டுமா? அரசாங்கத் திணைக்களங்கள்-அதிகாரிகள்-தமக்குள் நடத்தும் சகல தொடர்புகளையும் சிங்களத்திலேயே மேற்கொள்கின்றனர். ஆயின் தமிழ் உத்தியோகமொழி என்பதன் அர்த்தம் என்னவோ?

இந்த நாடு முன்னெப்போதும் இல்லாத அளவில் பெரும் நெருக்கடிகளையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்குவதற்கும், வன்செயல்கள் புள்ளியாய் இருந்து பூதமாக உருவெடுத்ததற்கும் வித்திட்டது மொழி விவகாரமே. தமிழ் மக்களின் மொழி உரிமை மறுக்கப்பட்டதுமன்றி, சிங்களம் அவர்கள் மீது திணிக்கவும் பட்டது. இன்றைய விளைவுகளுக்கு தமிழ்மொழிப் புறக்கணிப்பு என்ற விதையே ஆரம்பம்.

அதனைச் சிறிதும் உணராதவர்களாக ஆட்சியில் உள்ளோரும், அவர்களுக்கு முட்டுக் கொடுக்கும் அதிகாரிகளும் தம் மேசைக் காகிதத்தில் சட்டம் என்ற பெயரில் உத்தியோக மொழியாக்கிவிட்டு, வேடம் போட்டு விட்டு, நடைமுறையில் நாளாந்தம் தமிழர் முகங்களில் அறைந்து வருகிறார்கள்!

பெயருக்கு நாலு தமிழர்கள் அரசரங்கத்தில் அங்கம் வகித்து என்ன? மந்திரிகளாக இருந்தென்ன? அடிப்படைத் துவேஷம் கொழுந்துவிடும் தமிழ்மொழிப் புறக்கணிப்பில் அரசு திருந்தப் போவதில்லை. திரு. செல்லச்சாமியின் கடிதம் அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இதுவரை பதவி வகித்த, இப்போது பதவி வகிக்கும் தமிழ் மந்திரிகளின் கையாலாகாத்தனத்துக்குச் சான்றுவணம்!

வடக்கு கிழக்கில் உயர் அதிகாரிகளாக உள்ள தமிழர்கள் பலர் இன்னமும் ஆங்கிலத்தில் அலுவலாற்றி வருவது இதனை விட வேதனைக்கு உரியது. தமக்குக்கீழ் பணிபுரியும் ஊழியர்களுடனும் ஆங்கிலத்திலேயே தொடர்பு கொள்கிறார்கள் அவர்கள்!

எங்கள் ஆங்கில மோகமும், அவர்களின் சிங்களத் திணிப்பும் மாற்றமுறுத் தொடர் நிகழ்வுகளாகவே இருக்குமா? இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பது எப்போது?

## வல்வையில் தேடுதல்

வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் வெள்ளியன்றும் தேடுதல் இடம் பெற்றது: தேடுதலின்போது இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அந்த இருவரில் ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்டுபொலிஸ் கண்டி முகாமில் 9 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர் என்று கூறப்பட்டது:

கே. பாலகிருஷ்ணன் ஜெயதாஸ் (வயது 23) என்பவரே அந்த இளைஞர் ஆவார். கைதான மற்றைய இளைஞரின் பெயர் பரமகுரு மகேந்திரராசா (வயது 22).

(ஒ-160)

## 37 பரிசாரகர்கள் தெரிவாகினர்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 13

யாழ்ப்பாணம். கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு நேர்முகப் பரீட்சை மூலம் 37 பரிசாரகர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நாலாயிரத்துக்கும் மேற்பட்டோர் இப்பதவிக்கு விண்ணப்பம் செய்திருந்த போதிலும் அவர்களில் சுமார் 150 பேர் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்னர்: (உ-10)

## ஆஸ்பத்திரியில் மூவர் அனுமதி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 13

தண்ணீரூற்று மாமூலைப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது நால்வர் காயமடைந்தனர்.

அவர்களில் மூவர் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

பெரியகறுப்பன் காளிமுத்து (வயது 28), காளிமுத்து விஜயகுமாரி (வயது 17), ராசாத்தி தில்லையம்பலம் ஆகியோரே அந்த மூவருமாவர். (ஒ-9)

## ஒன்றரை நாள் மூடப்படும்

பசிலைப்பள்ளி, ஆக 13

சாவகச்சேரி நகர்ப் பகுதியிலுள்ள வியாபார நிலையங்கள் அனைத்தையும் வெள்ளிக்கிழமை அரைநாளும் ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் மூடுவதென்ற வர்த்தக சங்கத் தீர்மானம் அமுல் செய்யப்படுகிறது. (இ-117)

# யாழ். தபாலகத்துக்கு மேலதிக மின்சாரம் வழங்கக் கோரிக்கை

## தற்பொழுது மெழுகுவர்த்தி மூலம் வேலைகள்

யாழ்ப்பாணம், ஆக 13

யாழ் பிரதம தபால் அலுவலகத்துக்கு தினமும் ஆறு மணித்தியாலங்களுக்கு மின்சாரம் வழங்குமாறு யாழ் பிரதம தபால் அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை மின்சார சபைக்கும் இந்திய அமைதிப்படையின் நகரக் கொமாண்டருக்கும் இந்த கோரிக்கை கடிதம் மூலம் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் - தபால் அலுவலகத்துக்கு தினமும் காலை 5.15 மணிமுதல் காலை 8 30 மணி வரையும் மாலை 5 மணிமுதல் இரவு 8 மணி வரையும் மின்சாரம் வழங்குமாறு அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் தபால் அலுவலகம் தற்பொழுது சுழற்சி முறையின் கீழேயே மின்சாரம் பெற்று வருகிறது.

இதேவேளை தற்பொழுது யாழ் தபாலகத்தில் தபால்கள் தரம்பிரிக்கும் வேலைகள் உட்பட அத்தியாவசிய வேலைகள் மெழுகுவர்த்தி. பெற்றோமக்ஸ் வெளிச்சம் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. (இ-10)

## இந்து கலாசார நிலையம் திருமலையில் நிறுவப்படும்

கொழும்பு. ஆக 13

திருகோணமலை நகரில் இந்து கலாசார மத்திய நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்து கலாசாரத் துணை அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்காக ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோர இந்துக் கலாசார துணை அமைச்சின் கேள்விச்சபை முடிவு செய்திருக்கிறது.

இது சம்பந்தமான அறிவித்தலை இந்து கலாசார துணை அமைச்சின் செயலாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் அறிவித்திருக்கிறார். (ஒ-எ)

## குருபூசை

சுழிபுரம் ஆக 13

சைவப் பெரியார் ஸ்ரீவஸ்ரீ சிவபாதசுந்தரனார் குருபூசை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்றது. (இ - 28)

## மருந்து இல்லை

கோப்பாய் வடக்கு பகுதியில் குழந்தைகளுக்கு பி.சி சீ தடுப்பு மருந்து ஏற்றுவதற்கு நீர்வேலிக்கு செல்ல வேண்டியிருக்கிறது. கோப்பாய் சுகாதார நிலையத்தில் மருந்து இல்லாததே இதற்குக் காரணம். (இ-72)

மாகாணசபைகள்

## வெற்றிடங்கள் செப். 30க்கு முன் நிரப்பப்பட வேண்டும்

யாழ்ப்பாணம் ஆக. 13

சகல மாகாண சபைகளிலும் உள்ள நிர்வாக அதிகாரிகள் மட்டத்திலான வெற்றிடங்கள் அடுத்த மாதம் (செப்டம்பர்) 30 ஆம்திகதிக்கு முன்னர் நிரப்பப்பட வேண்டும் என்று மாகாணசபைகள் அமைச்சர் யு. பி. விஜேக்கூன் உத்தரவிட்டார்.

மாகாணசபைகளின் பிரதம செயலாளர்களாக தனி அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

இப்போது சில மாகாண சபைகளில் அரச அதிபர்கள் பிரதம செயலாளர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். (த - எ)

## சாவகச்சேரி இந்து இருபாடசாலைகளாகிறது

யாழ்ப்பாணம் ஆக. 13

சாவகச்சேரி இந்துக்கல்லூரி இரு பாடசாலைகளாக பிரிக்சப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இருந்து ஆரம்ப பிரிவை எடுத்து சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை உருவாக்கப்பட்டுள்ளது:

மாகாணக் கல்விப்பணிப்பாளரால் விடுக்கப்பட்ட உத்தரவை அடுத்து எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் புதிய ஆரம்பபாடசாலை தனியாக இயங்கத் தொடங்கும். (அ - 3)

## பாதையில் நெருக்கடி

கோப்பாய், ஆக. 13

கோப்பாய் சந்திக்கு அண்மையாக வாகனங்கள் ஒழுங்கு விதிப்படி நிறுத்தப்படாமல் இருபுறமும் நிறுத்தப்படுவதால் பாதசாரிகளும் சைக்கிளில் செல்லுபவர்களும் வீதியில் வரும் வாகனங்களுடன் மோதவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (க-72)

# வெளிநாட்டு வேலை பெறுவோர் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஆக. 13

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வோரின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது:

1986 ஆம் ஆண்டு முதல் 89 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பணியகம் 2 லட்சத்து 79 ஆயிரத்து நானூற்றி தொண்ணூற்று இரண்டு வேலை வாய்ப்புகளுக்கு அங்கீகாரம் அளித்திருந்ததாகவும்-

ஆனால் சுமார் 50 ஆயிரம் பேரே இக் காலப்பகுதியில் வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்றிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை குறித்து ஆராய்ந்து இதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க பணியகம் எத்தனித்துள்ளதாகவும், மேற்படி பணியகத்தின் தலைவர் தெரிவித்தார். (த)

## மலேரியா மீண்டும் பரவுகிறது

கொழும்பு, ஆக. 13

மலேரியா மீண்டும் உலகெங்கும் பரவி வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஆபிரிக்க, அமெரிக்க கண்டங்களிலேயே இது மீண்டும் அதிகளவில் பரவி வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு கண்டங்களிலும் இருந்த மலேரியா நோய் முன்னர் ஒழிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

உலகில் ஒவ்வொரு வருடமும் 10 கோடி மக்கள் மலேரியாவால் பாதிக்கப்படுகின்றார்கள் என்றும் 26 கோடி 40 லட்சம் பேரின் உடலில் மலேரியாக் கிருமிகள் இருப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஆசியாவில் சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் இந்த நோய் கட்டுப்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (த)

## ஆறுதல் அளிப்பாய் முருகா!

எடுப்பு

நம்பியே உன்னை நாடியே தினமும்
கும்பிடும் என்னைக் கைவிடலாமோ?
(நம்பியே......)

தொடுப்பு

சிந்தையில் நீதான் நிறைந்திருக்கின்றாய் வேறு
சிந்தனை நெஞ்சில் தோன்றிடுமாமோ?
(நம்பியே......)

முடிப்பு

வல்வினை வாட்ட வருந்துகின்றேனே
சொல்லியே அழுதிடும் என்குரல் கேட்பாய்
நல்லையின் நாதா நீவந்து காப்பாய்
அல்லலை அறுத்தே ஆறுதல் அளிப்பாய்!
(நம்பியே......)

— நாயன்மா[illegible]
([illegible])

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக. 13

யாழ்-பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் ஆகஸ்ட் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-15 முதல் 9-40 மணிக்குள் வரும் சுப வேளையில் நடைபெறும்.

யாழ்-பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஆதரவில் திருப்பணி வேலைகள் நடைபெறவுள்ளன. (க)

## காணிக்கை மாதா தேவாலய உற்சவம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 13

கிளாலி காணிக்கை மாதா தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் ஆறும் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை திங்கட்கிழமை மாலை நற்கருணை ஆராதனையும் திருப்பலியும் மறுநாள் காலை திருப்பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளன.

நவநாள் ஆராதனைகளை மிருசுவில் பங்குத் தந்தை லோறன்ஸ் சேவியர் அடிகளார் நடத்தி வருகிறார் (க-117)

## மருதனுமடம் ஆச்சிரம பொன்விழா

யாழ்ப்பாணம். ஆக.13

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா 20ஆம், 21ஆம் திகதிகளில் மருதனுமடம் சேவாச்சிரமத்தில் நடைபெறும்.

20ஆம் திகதிஞாயிறு விழா பரிசுத்த நற்கருணை ஆராதனையுடன் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 3-30 மணி நாட்டுக்கூத்து நிகழ்ச்சியுடன் முடிவடையும்.

21ஆம் திகதி திங்கட்கிழமை விழாவும் காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகும்:

மாலை 5.00 மணிக்கு முதியோர் இல்லத்துக்கு அடிக்கல் நடும் வைபவத்துடன் முடிவடையும். (இ)

## கண்டதும் கேட்டதும்

யாழ்ப்பாணம் சுகாதார சேவை பிராந்திய பணிப்பாளர் பணி மனையில் கடந்த 9 ஆம் திகதி ஆண்— பெண் பரிசாரகர் (Attendnt) பதவிக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்களில் துன்னாலை வடக்கைச் சேர்ந்த க. தவனேஸ்வரன் என்பவரும் ஒருவர்.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் இவருக்கு நேர்முகப் பரீட்சை முடிந்து ஒருநாள் கழித்தே கிடைத்தது அதாவது 10 ஆம் திகதியே கிடைத்தது.

நேர்முகப் பரீட்சை முடிந்த பின் அதற்கான கடிதம் விண்ணப்பதாரர்களுக்குக் கிடைப்பது இன்றைய போக்குவரத்துச் சீர்கேட்டில் சர்வ சாதாரண விஷயம் அதாவது கொழும்பில் இருந்து அனுப்பப்படும் கடிதங்களுக்கு.

ஆனால் பரிசாரகர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதம் யாழ்ப்பாணம் சுகாதார சேவை பிராந்திய பணிப்பாளர் பணி மனையில் இருந்தே அனுப்பப்பட்டுள்ளது[

இதில் இன்னும் ஓர் ஆச்சரியம் என்னவென்றால் நேர்முகப் பரீட்சை நடந்த 9 ஆம் திகதிய ''திகதி முத்திரை''யே கடித உறையில் குற்றப்பட்டிருப்பதாகும்.

இதில் தப்பு என்ற தொப்பி சுகாதாரப் பகுதியிடமோ அல்லது தபாற் பகுதியிடமோ?

— செய்தி லோலன்

## வாசகர் திருமுகம்

### கம்பித் திருட்டு

கிளிநொச்சியில் இருந்து இராமநாதபுரம் வரையும் முன்பு தொலைபேசித்தொடர்பு இருந்தது. அதற்கான வயர்கள் யாவும் சிமெந்தினாலும் இரும்புக் கம்பிகளாலும் ஆன தூண்களால் பொருத்தப்பட்டிருந்தன.

இந்த வயர்கள் இப்பொழுது திருடர்களால் அபகரிக்கப்படுகின்றன. அவர்கள் தூண்களை உடைத்து உள்ளே இருக்கும் கம்பிகளைத் திருடுகின்றார்கள்:

இத்திருட்டைத் தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மற்றும் பொதுமக்களும் நடவடிக்கை எடுப்பார்களா?

க ச. சேகரம்,
வட்டக்கச்சி.

### வடமராட்சி மக்களுக்கு நிவாரணம்

வடமராட்சி மக்கள் தொடர்ந்து வன்செயல்களை அனுபவித்து வருகின்றார்கள்: மாணவர் கல்வி பாழடைந்துள்ளது. மக்களின் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் போன்ற தொழில்களும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மனித உயிர்கள் அழிகின்றன. பொருளாதாரம் வீழ்ச்சியடைகின்றது.

வடமராட்சி மக்கள் உணவு முத்திரைக்குரிய பாவனைப் பொருள்களைக் கூட உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதில் தடங்கல் ஏற்படுகின்றது:

வடமராட்சி மக்களுக்கு இன்னும் உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. ஆகவே அவர்களுக்கு ''புனர்வாழ்வு புனரமைப்பு'' அமைச்சின் அதிகாரிகளும் மற்றும் அரச அதிகாரிகளும் விசேட நிவாரணம் வழங்க ஒழுங்கு செய்வார்களா?

கா. யோகரத்தினம்
பருத்தித்துறை

### மத்திய தபாலகக் கட்டடம்

யாழ். மத்திய தபாலகத்துக்கென அமைக்கப்படும் புதிய கட்டடம் பழைய இடத்தில் அமைவது அவ்வளவு உகந்ததல்ல. தபாற் சேவை, புகையிரத சேவையுடன் தொடர்புடையது. எனவே புகையிரத ஸ்தானத்தை அண்மித்த பகுதியில் அமைவது மிகவும் நல்லது.

போதிய தபால், உப தபால் கந்தோர்கள், குறிச்சிகள் தோறும் இருப்பதால் யாழ். பெரிய தபால் கந்தோரும் நகரத்தின் மத்தியில்தான் அமைய வேண்டும் என்றில்லை.

வி. நாகரத்தினம்
(இளைப்பாறிய அஞ்சல் அதிபரும் சமிக்ஞையாளரும்)
திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வேகமாக விற்பனையாகின்றன
அஸ்ரன் வெளியீடுகள்

ஆசிரியர் பயிலுநர் போட்டிப் பரீட்சைக்குரிய
பொது அறிவு -
பொதுஉளச்சார்பு [விலை 65/50]
(1984, 87 பரீட்சைகளின் வினா-விடைகளை உள்ளடக்கியது)

S. L. A. S. மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குரிய
இரகித்தல், நுண்ணறிவு,
விடயஆய்வு
(1986 87 பரீட்சைகளின் வினா-விடைகளை உள்ளடக்கியது)


★ எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
கேட்டு வாங்குங்கள்!
அஸ்ரன் வெளியீடுகள்!!
(சி-3276)

விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
A/L கலை, வர்த்தக
வகுப்புக்கள்
91 பிரிவு 2, ஆரம்பமாகிவிட்டன
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. கலாகரன் |
| வர்த்தகம்:- | திரு. லங்கா |
| கணக்கியல்:- | திரு. வன்னிய சிங்கம் |
| அளவையியல்:- | திரு. சுப்பிரமணியம் |
| இந்து நாகரிகம்:- | திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| தமிழ்:- | திரு. குழந்தை |
| புவியியல்:- | திரு. குணராஜா |
| அரசியல்: | திரு: மஃறூப் |

● முக்கிய குறிப்பு:- கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து கற்பிக்கும் ஒரே நிறுவனம்.
(சி-8261)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
திரு. அப்புத்துரை யோகலிங்கம்
(C. T. B. Jaffna)

தோற்றம்: 21 08 1942
மறைவு: 14-07-1989

ஊனாய் உயிராய் எம்முடன்
தேனாய் இனிக்கத் தெய்வமாய் வாழ்ந்தாய்!
அதனால்
நமக்கு அது வழியே நாம் போமளவும்
எமக்கென்வென்றிட்டுண்டிருக்க இயலவில்லையே!
விண்ணுலகு சென்றாலும் அங்கு நீ
விடி வெள்ளியாய் இருப்பாய்!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகள், தாய்,
சகோதரர்கள்.

நுணாவில்சந்தி,
சாவகச்சேரி.
(1475)

# சுவிஸில் தமிழ் அகதிகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படும் அபாயம்

## எண்ணிக்கை அதிகரித்து வருவதால் விளைவு

பேளின், ஆக. 13

சுவிற்சலாந்தில் அரசியல் அகதிகள் என்ற பெயரில் தஞ்சம் புகுவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இதனால் உள்நாட்டு அரசியலில் எதிர்பாராத தாக்கங்கள் ஏற்படத் தொடங்கி இருப்பதுடன், உண்மையான அகதிகள் விடயத்திலும் பாதிப்புக்களை உண்டாக்கத் தொடங்கியுள்ளது. இந்தநிலை அரசியல் தஞ்ச விவகாரப் பொறுப்பாளர் திணைக்களத்தைக் கவலை கொள்ளச் செய்துள்ளது.

இவ்வாறு கூறினார் சுவிஸ் அரசியல் தஞ்ச விவகாரப் பொறுப்பாளர் திணைக்கள அதிகாரி திருமதி ரொய்ஷ்ஷர் சுவிற்சலாந்தில் பேண் நகரத்தில் தமிழ் அகதிகள் பிரதிநிதிகளுக்கும், அரசியல் தஞ்ச விவகாரப் பொறுப்பாளர் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையே தமிழ் அகதிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

கலந்துரையாடலை திரு. வால்ட்டர் சிமித் ஆரம்பித்து வைத்தார். கலந்துரையாடலில் அரசியல் தஞ்ச விவகாரப் பொறுப்பாளர் திணைக்களத்தின் அதிகாரி திருமதி ரொய்ஷ்ஷர் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றினார். அப்போது அவர் மேலும் சொன்னதாவது:

புதிய அகதிகள் வருகை, சிறுவர்களின் வருகை என்பன தொடர்பாக சுவிஸில் ஏற்பட்டுள்ள தாக்கம், உள்நாட்டு மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை என்பன அரசியல் தஞ்ச விவகாரப் பொறுப்பாளர் திணைக்களத்தைக் கவலை கொள்ளச் செய்கின்றது.

தற்பொழுது தமிழ் அகதிகள் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. அகதிகள் எண்ணிக்கை 5 ஆயிரமாக இருந்த போது சுவிஸ் மக்கள் மத்தியில் நிலவிய மனோநிலையை விட அகதிகள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்கின்றநிலை தற்போது மாறுபட்டுச் செல்கின்றது.

இப்பொழுது அதிகரித்து வரும் தமிழ் அகதிகள் உண்மையில் இலங்கையில் ஸ்ரீலங்காவில் இருந்துதான் வருகின்றார்களா என்ற சந்தேகமும் ஏற்படத் தொடங்கி உள்ளது: பல ஐரோப்பிய நாடுகளில் அகதிகள் எண்ணிக்கை குறைந்துவரும் நிலையில் இங்கே அகதிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இது பற்றிப் பூரணமான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

— இவ்வாறு திருமதி ரொய்ஷ்ஷர் தெரிவித்தார்.

திருமதி ஸ்கீஸர், திரு. வால்ட்டர் சிமித், இலங்கை அகதிகள் சார்பில் திரு. இ. சேகர் உட்பட பலர் உரையாற்றினர்.

புதிய தமிழ் அகதிகள்வருகை சிறுவர்களின் பிரச்சினை அகதிகளை திருப்பிஅனுப்புதல் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை உட்பட பலபிரச்சினைகள் பற்றி கலந்துரையாடலில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (அ)

## வடமராட்சி அகதிகள்

வடமராட்சியைச் சேர்ந்த பலர் அகதிகளாக சாவகச்சேரிக்கு வந்தவண்ணம் உள்ளனர்.

உறவினர்கள் பலர் காணாமற் போயுள்ளதாகவும், சிலர் மரணமானதாகவும் அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர். (க- 117)

# நாகர்கோவில் பகுதி மக்கள் குடாரப்புக்கு இடம் பெயர்வு

வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோவில் பகுதி மக்கள் குடாரப்புக்கு இடம்பெயர்ந்துள்ளார்கள்.

கடந்த திங்கட்கிழமை நாகர்கோவில் பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும், குண்டுச்சத்தங்களும் கேட்டதை அடுத்தே அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ஒ'144)

# முத்திரை இடப்படாத தராசு

சேமமடு, ஆக 13

வவுனியா மார்க்கட்டில் வியாபாரம் செய்யும் பல வர்த்தகர்கள் சிலர் தாம் பாவிக்கும் தராசு படிகளுக்கு முத்திரையிடாமல் வியாபாரத்தில் ஈடுபடுவதாக வவுனியாக் கச்சேரி நிறுவைகள், அளவைகள் பிரிவுக்குப்பொது மக்களிடமிருந்து பல புகார்கள் கிடைத்துள்ளன.

பொதுமக்களின் இந்தப் புகார்களைக் கவனத்தில் கொண்டு இம்மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் தராசு படிகள் முத்திரையிடப்படும் என மாவட்ட நிறுவைகள் அளவைகள் பரிசோதகர் வை. கிருஷ்ணதாசன் அறிவித்துள்ளார். (இ-35)

## படிவம் பெற தவறியோர்

பச்சிலைப்பள்ளி, ஆக 13

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒருங்கிணைந்த நிவாரணப் படிவம் பெறத் தவறியவர்களுக்கு படிவம் வழங்குவதற்கு உதவி அரச அதிபர் க. கந்தசாமி நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி படிவம் பெறத் தவறியவர்களின் விபரங்களை ஆகஸ்ட் பதினைந்தாம் திகதிக்கு முன் வழங்குமாறு அப்பகுதி கிராமசேவை அலுவலர்களை அவர் கேட்டுள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

கோப்பாய் தெற்கு, வீரபத்திர கோயில் ஒழுங்கையில் அமைந்துள்ள ''தனிப்பனை ஒல்லை'' ஆதனம் நிலப்பரப்பு 4 1/8 கொண்ட ஆதனம் நல்லூர் கந்தசாமி ஆலய பூசகர் கந்ததாசஐயர் சண்முகநாதசர்மாவுக்கும் பெண் சாந்தாதேவிக்கும் உரியதாகும். இவ்வாதனத்தில் ஒற்றிசட்டு உறுதியால் சின்னத்தம்பி சுந்தரம் என்பவர் குடியிருந்து வந்தார். இவர் கொடுத்த காலத்திற்கு மேலாக சட்டவிரோதமாக இருந்து வந்ததை ஆட்சேபித்து யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் காணி வழக்கு 2365 தாக்கல் செய்யப்பட்டு, இவரை 1985 மார்கழி முடிவுடன் வெளியேறுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது: தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த பொழுது நீதிமன்றமும், பொலீஸும் செயலிழந்துவிட்டது. இதனைச் சாதகமாக்கி சின்னத்தம்பி சுந்தரம் குறித்த ஆதனத்தை தனதாக்கும் நோக்குடன் பல சட்டவிரோதச் செயல்களைச் செய்துவருகின்றார். யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலும் வங்கியிலும் மானியம், கடன் பெற முயற்சி செய்துள்ளார்: இவர் இப்படிச் செய்வதற்கு எவ்வித உரித்தும் இல்லை என்பது இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

த. சோமசுந்தரம்
வழக்காளியும், சட்டத்தரணியும்.
(1490)

University of Jaffna.
Tender Notice

Supplying and/or Installation of Air Conditioners.

Sealed Tenders are invited for the Supplying and/or installation of air conditioners at the following locations:

1. Medical Faculty-
   a) Department of Physiology 01No.
   b) Department of Pathology 01 No.
   c) Department of Bio-Chemistry 01 No.
   d Department of Anatomy 01 No
   e) Medical Faculty Library 01 No.
   f) Medical Faculty Board Room 01 No.
2 Library - 02 Nos;
3. Finance Branch - 01 No
4. Department of Maths Computer Unit - 01 No:

Tender documents in connection with this work will be issued at the Finance Branch. University of Jaffna during office hours from 22nd tc 25th August' 89 on payment of non refundable fee of Rs. 200/- for each Tender.

If necessary, site inspection could be made along with the Works Engineer from 9 a.m. to 10 a. m. on 29th August, 1989.

The Tender Documents should be forwarded to the Bursar, University of Jaffna by registered post or personally with the mark "Tender for Supplying and / or installation of Air Conditioners" to reach him on or before the 08th September 1989 at 10 a. m. Tenders will be opened on the same day at 10.30 a.m.

Actg. Registrar.
[C-3270]

உங்கள் வீட்டு மங்கள வைபவங்களுக்கு தேவையான
★ பூச்செண்டுகளும் ★ கதிரைகள்
★ பீங்கான் - கிளாஸ் - றே
வகைகளையும் குறைந்த வாடகையில் பெறுவதற்கு
தொடர்பு கொள்ளவும் :
பிறைற் ஹவுஸ்
(புனித சந்தியோமையோர் ஆலய மருங்கு)
210, பிரதான வீதி
யாழ்ப்பாணம். (C/3281)

மின்சாரம் இல்லாத வேளைகளிலும், எமது போட்டோ பிரதிசேவை ஜெனரேட்டர் உதவியுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
உங்கள் போட்டோ பிரதி தேவைகளுக்கு
எம்மை நாடுங்கள் !
சண்முகம் றேட்ஸ்
இல. 65, (185) பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[1483]

தரமான கலர்ப்படப் பிரதிகள்
அதி குறைந்த கட்டணத்தில்...
மிகக் குறுகிய காலத்தில்...
கலர்ப்படச் சுருள்
கழுவுதல்
முற்றிலும் இலவசம்
நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில்
பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்



ஷப்ருவை நாடுங்கள்:
ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்டத்தில் மாவின் விலை உயர்த்தப்பட்டது ஏன்?

## உதவி ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஆக 13

யாழ்மாவட்டத்தில் மாவின் மொத்த விலை ஒரு கிலோவுக்கு எட்டு ரூபா ஐம்பது சதமாகவும், சில்லறை விலை ஒரு கிலோவுக்கு எட்டு ரூபா எழுபத்தைந்து சதமாகவும் இருக்கும்''

இப்படிக் கூறியுள்ளார் யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ் ஐ: நித்தியராஜ்-

மா விலையேற்றம் சம்பந்தமாக அவர் விடுத்துள்ள அறிக்கை விபரம் வருமாறு.

யாழ்ப்பாண உணவுக் களஞ்சியங்களில் சோதுமை மா இல்லாது, மாவிற்குத் தட்டுப்பாடு நிலவிய காலங்களில் ஒரு கிலோ மா ரூபா 13வரை விற்கப்பட்டுள்ளதை யாழ் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்:

கொழும்பிலிருந்து கப்பலிலோ, ரயிலிலோ மா தருவிக்கப்படாத சூழ்நிலையில், திருகோணமலையிலிருந்து மாவைக் கொண்டு வருவதே, தட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஒரே வழியாக இருந்தது.

திருமலைக்குச் செல்லும் வழியில் பல்வேறு ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுமென நன்கு தெரிந்திருந்தும், சங்கங்களின் கொள்வனவு உத்தியோகத்தர்கள், சாரதிகள், கிளீனர்கள் ஆகியோர் திருமலைக்குச் செல்ல தாமாகவே முன்வந்ததால் மாவின் தட்டுப்பாடு நீங்கியது.

ஒவ்வொரு லோட் மாவிற்கும் போக்குவரத்துச் செலவாக ரூபா 6000/- வரை ஏற்படுகிறது. இக்கொள்வனவில் ஈடுபடும் பணியாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன், சிறிய அளவிலான பாதுகாப்பு நிதியமும் (Risk Fund) உருவாக்கப்பட்டுள்ளது.

இச் செலவுகளும் போக்குவரத்துச் செலவுகளில் சேர்க்கப்பட்டாக வேண்டும். இம் மேலதிக செலவை சங்கங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை இப்பணம் வழங்கப்படவில்லை. இன்று வரை கொண்டு வரப்பட்டுள்ள 600 லோட் மாவிற்கும் போக்குவரத்துச் செலவாக ரூபா 35 லட்சம் வரை தமது சொந்தப் பணத்தை சங்கங்கள் செலவழித்துள்ளன.

திருமலையில் இருந்து மாவை 7/85 ஆகக் கொள்வனவு செய்து போக்குவரத்துச் செலவும் 1 கிலோவுக்கு /-60 சதம் செலவிட நேரிடும் போது மொ: கொள்விலை ரூ 8/45 ஆக அமைகின்றது. இதனால் சங்கங்கள் நட்டம் அடைவதை தவிப்பதற்காகவும் போக்குவரத்துச் செலவின் ஒரு பகுதியையாவது ஈட்டிக் கொள்வதற்காகவுமே மாவின் விலை 1 கிலோவுக்கு -/25 சதம் கூட்டி சில்லறை விலை ரூ. 8/75 ஆக விற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

[...] போக்குவரத்துச் செலவை வழங்குவதில் மேலும் காலதாமதம் ஏற்படுமிடத்து, தங்கள் சொந்தப் பணத்தைச் செலவழித்து, மாவைக் கொண்டுவரக்கூடிய நிலையில் சங்கங்கள் இல்லை என்பதை உறுதியாக தெரிவிக்க விரும்புகிறேன். வங்கிக் கடன்களைப் பெற்று இதனை செய்ய முடியாது. வேறு வழிகளால் மா வந்தாலன்றி, மாவின் விலை மீண்டும் அதிகரிக்கப்படுவதை தவிர்க்கமுடியாது.

இவ்வாறன விலையேற்றங்களைத் தடுப்பதாயின், சங்கங்களுக்கு மேலதிக நிதி இழப்பு ஏற்படாத வகையில், போக்குவரத்துச் செலவு உடனடியாக வழங்கப்படவேண்டும். அன்றேல் நுகர்வோரிடமிருந்து அறவிடப்படவேண்டும்.

இக்காரணங்களினாலேயே 60 சதம் போக்குவரத்துச் செலவு காரணமாக ஒரு கிலோ மாவின் மொ. விலை 6 ரூபா 50 சதமாகவும், சில்லறை விலை ரூபா 8/75 சதமாகவும் விற்கப்படுகின்றன.

9. 8. 1889இல் நடைபெற்ற பொது முகாமையாளர்களின் மாதாந்தக் கூட்டத்தில் இவ்விடயம் நன்கு பரிசீலிக்கப்பட்டு, சங்கங்களுக்கு ஏற்படக்கூடிய நிதிப் பளுவைக் குறைக்கும்வண்ணம் 9. 8. 89 இருந்து சகல ப: நோ: கூ. சங்கங்களும் ஒரு கிலோ மாவின் மொ. விலை ரூபா 8/50 ற்கும் சில்லறை விலை 1 கிலோ மாவிற்கு 8/75 இற்கும் விற்கப்படல் வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர் என்பதோடு. போக்குவரத்துச் செலவு உடனடியாகத் தரப்படுமிடத்து, 25, சதம் குறைந்து விற்கப்படுமென்பதையும் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 6 இந்திய கிரிக்கெட் வீரர் தடைக்கு எதிராக வழக்கு

புதுடில்லி, ஆக 13

வெங்சர்க்கர், கபில்தேவ் உட்பட ஆறு இந்திய கிரிக்கெட் வீரர்கள் ஓராண்டு காலம் விளையாட இந்திய கிரிக்கெட் சபை விதித்த உத்தரவை எதிர்த்து புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

மனு நீதியரசர்கள் கே. என். சிங், எஸ். நடராஜன் ஆகியோர் முன்னிலையில் கடந்த வியாழன் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டனர்.

பின்னர் மனுவை விசாரணைக்கு அனுமதித்த நீதியரசர்கள், வருகிற 23 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி இந்திய அரசுக்கும் இந்திய கிரிக்கெட் சபைக்கும் அழைப்பாணை அனுப்பும்படி உத்தரவிட்டனர்.

மனு தாக்கல் செய்திருக்கும் வழக்கறிஞர் வினீட் குமார், புதுடில்லி கிரிக்கெட் கழக முச்கியஸ்தர் ஆவார்.

(உ-எ)


## அறிவித்தல்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்குள் வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டமும், அது தொடர்பான உப விதிகள், சுற்று நிருபங்கள் ஆகியன 01. 01. 1989 ஆம் திகதி தொடக்கம் அமுல் படுத்தப்பட்டுள்ளன. எனவே அப்பிரதேச எல்லைக்குள் இருக்கும் புலோப்பளை, முகமாலை, முள்ளிப்பற்று ஆகிய உப - அலுவலக எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், பழைய கட்டடங்களைத் திருத்துதல் எல்லைச் சுவர்களை அமைத்தல், புதிய பாதைகள் திறத்தல் போன்றவற்றைச் செய்யுமிடத்து பிரதேசசபையின் முன் அங்கீகாரம் பெற்றுச் செயற்படுதல் வேண்டும்.

இது சம்பந்தமான விபரங்களை இப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திலோ அல்லது உப-பணிமனைகளிலோ அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்;

சு. கந்தசாமி.
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை,

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பிரதேச சபை அலுவலகம்
பளை.

(C/3275)



மலிவு விலையில் அறிமுகம்!
HILTON TRIP SWITCH
மின்பொறியியலில் புகழ் மிக்க
OTTERMILL CHILTON LTD
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

**சுந்தர்சன்**

சந்தை முன்,
மானிப்பாய்.

(C/3121)


## பல்கலைக்கழக மாணவர் விடுவிப்பு

கொழும்பு, ஆக.13

வெலிசற பாதுகாப்புத் தடுப்பு முகாமிலிருந்து 28 பல்கலைக்கழக மாணவர் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் உடனடியாக மாத்தறை பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மான்ய ஆணைக் குழு அதிகாரிகளால் நேற்று அனுப்பிவைக்கப்பட்டனர்.

இன்னும் குறைந்தது 50 பல்கலைக்கழக மாணவர்கள் பாதுகாப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## சர்வோதயம் உதவி

தாளையடி, ஆக.13

வல்வெட்டித்துறை ஊறணி இந்திராணி அரசினர் வைத்தியசாலைக்கு சர்வோதய இயக்கம் அத்திய அவசிய மருந்துப் பொருள்களை வழங்கி உதவியுள்ளது:

வைத்தியசாலை நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்கவே ரூபா 10 ஆயிரம் பெறுமதியான மருந்துப்பொருள்கள் வழங்கப்பட்டன.

(ஒ-144)

## இலவச மா பைக்கற்

பச்சிலைப்பள்ளி, ஆக. 13

கிளாலி, மிருசுவில், கொடிகாமம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் வறிய மக்களுக்கும் இப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கும் திருச்சபையினால் வழங்கப்பட்ட இலவச மா பைக்கற்றுக்களை மிருசுவில் பங்குத்தந்தை லோரன்ஸ் சேவியர் அடிகளார் வழங்கினார்

[ச- 117]


### வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 3500 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனையாகவுள்ளது. இவற்றுக்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/-செலுத்திப் பெற்ற விண்ணப்பப் படிவங்களில், முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 17. 8. 89 வியாழக்கிழமைக்கு முன்னதாகச் சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குகளுக்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடவும்.
கேள்விப்பத்திரப் பணை வைப்பு ரூபா 500/—

பொதுமுகாமையாளர்,
[illegible]
ப. நோ. கூ. சங்கம்.
[illegible]


## கூட்டுறவு இயக்கங்களே சமதர்ம சமுதாயத்தை உருவாக்கக் கூடியவை

பண்டத்தரிப்பு, ஆக 13

சமதர்ம சமுதாயத்தை உருவாக்க கூடிய ஒரு இயக்கம் கூட்டுறவு இயக்கம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கமே சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் வல்லமை கொண்டவை.

வடக்கு— கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு எஸ், வேலாயுதபிள்ளை பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்:

சங்கத் தலைவர் திரு: வீ. நவரத்தினராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது:

மேலும் அவர் பேசுகையில் யாழ் மாவட்டத்தில் 22 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் உணவுப் பொருள் நெருக்கடியின் போது திருகோணமலை சென்று பிரிமா ஆலையில் இருந்து மா எடுத்து வந்தனஇது பாராட்டப்பட வேண்டியது:

இதன் மூலம் மா தட்டுப்பாடும் கள்ளச்சந்தை விலை ஏற்றமும் தவிர்க்கப்பட்டது என்றார். (க-120)


## விக்ன டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுககு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L** பிரிவு 6 **Day Classes** (8.30 - 1.30)
**Evening Classes** (2.00 - 4.00)

ஆரம்பம்: 14 - 8 - 1989

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு ★

| | |
|---|---|
| விஞ்ஞானம்:- | திரு. J. R: சூரி |
| கணிதம்:- | திரு: செல்வா |
| ஆங்கிலம்:- | திரு: விஸ்வநாதன் |
| தமிழ்:- சமயம்:- | திரு. சுந்தரலிங்கம் |
| சமூகக்கல்வி:- | திரு: கருணாகரன் திரு. சுந்தரமூர்த்தி |
| வர்த்தகம்:- | திரு: கருணாகரன் |

முக்கிய குறிப்பு:
கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தப்படும் ஒரே நிறுவனம்.
● விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(கு3/35)



# கேள்வி அறிவித்தல்

## பிரதேச கல்வித் திணைக்களம், மன்னார்.

கீழ்க் குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் மன்னார் பிரதேசக் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் எதிரே குறிக்கப்பட்ட தொகைக்கோ அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கோ கட்டட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டடத் திணைக்களம், நீர்ப்பாசனத்திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி. ப. 2. 00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 50/-ம் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/ம் செலுத்தியதின் பேரில் கேள்விப் பத்திரங்கள் மன்னார் பிரதேச கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன ''பிரதேசக் கல்விப் பணிப்பாளர் மன்னார் என்ற முகவரிக்குச் செலுத்தப்படக் கூடியதாக, வங்கிக் கட்டளையாகவோ அல்லது காசுக் கட்டளையாகவோ செலுத்தப்படல் வேண்டும்: கேள்விகள் 1989-ம் ஆண்டு ஆக. மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு மன்னார் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர்கள் சமூகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அது பற்றி அறிவிக்கப்பட்ட திகதியில் இருந்து பத்து (10) நாட்களுள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் தெரிவு மறு அறிவித்தல் இன்றி இரத்துச் செய்யப்படும்.

மேலதிக விபரங்கள் மன்னார் பிரதேச கல்வித் திணைக்களத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | பாடசாலையின் பெயரும் வேலையின் விபரணமும் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. | மன்/ அல்- அஸ்ஹர் ம. வித். பெருந்திருத் மும் கட்டட நிர்மாணமும். | ரூ. 1, 000, 000. 00 |
| 2. | மன்/ எருக்கலம்பிட்டி மு. ம. ம வித் பெருந்திருத்த வேலைகள் | ரூ. 575, 000; 00 |
| 3 | மன்/ பரப்பான் கண்டல் றே: க. பா, பெருந்திருத்தம், சல கூடம் அமைத்தல் | ரூ. 500, 000. 00 |

| இல. | பாடசாலையின் பெயரும் வேலையின் விபரணமும் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 4. | மன்/ சின்னப்பண்டிவிரிச்சான் அ. த. த பா பெருந்திருத்தம்: மலசல கூடம் அமைத்தல் | ரூ. 200, 000. 00 |
| 5. | மன்/ தட்சணாமருதமடு அ. த; க, பா. பெருந்திருத்தமும், சல கூடம் அமைத்தலும் | ரூ. 150, 000. 00 |
| 6 | மன்/ கீரிசுட்டான் றே. க. பா பெருந்திருத்தம், மலசல கூடம் அமைத்தல் | ரூ. 110, 000, 00 |
| 7 | மன்/ பாலம்பிட்டி அ. த க பா பெருந்திருத்தம் | ரூ. 60, 000, 00 |

ஆர். சுந்தரலிங்கம்,
பிரதேச கல்விப் பணிப்பாளர்,
மன்னார்.

கல்வித்திணைக்களம்,
மன்னார்,
13-08- 1989

(இ/3210)



# அர்ச்சுன

கல்வி - முயற்சி - பெருவாழ்வு



# சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்ய விரும்புகிறீர்களா?
அவர்களின் அறிவுப் பசிக்கு பல்சுவை விருந்து அளிக்க விரும்புகிறீர்களா?

உடனே

'அர்ச்சுன' வை வாங்கி

மாதந் தோறும் பரிசாக வழங்கவும்

விலை ரூபா 4/- மட்டுமே.

ஆண்டுச் சந்தா ரூபா 55/- (தபால் செலவு உட்பட)

காசோலை / காசுக்கட்டளை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்று எழுதி த. பெ. எண் 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலகப் பையன்கள் தேவை

வர்த்தக அச்சகப் பிரிவில் பணியாற்றுவதற்கு அலுவலகப் பையன்கள் (Peons) தேவை.

எட்டாம் வகுப்புக்கும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமை உடையோரும் விண்ணப்பிக்கலாம்;

முன் அனுபவம் உள்ளோருக்குச் சலுகை வழங்கப்படும். உறவினர்கள் அல்லாத இருவரிடம் பெற்ற நற்சான்றிதழ்களுடனும், சுயவிபரம் கொண்ட விண்ணப்பத்துடனும் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்

**அருண் அச்சகம்**

15. இரண்டாவது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (3212)



# யாழ் - கொழும்பு பயணிகளே!

உங்கள் வசதி கருதி கொழும்பில் புதிய ஆசனப் பதிவு நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்:

யாழ் - கொழும்பு சேவையில் ஈடுபடும் சொகுசு மற்றும் மினி பஸ்களுக்கான ஆசனப் பதிவுகளை எமது நிலையத்தில் செய்து கொள்ளலாம்.

**சொகுசு பஸ் சேவைகள்**

கே. எஸ் பி. ரூர்ஸ்,
எம். ஆர். ஜி. ரூர்ஸ்,
வி. ஜே. எஸ். எக்ஸ்பிறஸ்

**மினி பஸ் சேவைகள்**

SENTHA EXPRESS
NIMAL TRAVELS

தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

**லங்கா புக்கிங் சென்ரர்,**
No. 26. வுல்வென்டோல் வீதி.
கொழும்பு - 13
தொலைபேசி 436442 (11724)



# வெளிநாட்டுப் பயணம்

★ **அவுஸ்திரேலியா (Australia)**
பயணம் செய்ய விரும்புவோருக்கு 20.08.89 இல் பயண ஒழுங்கு செய்து தரப்படும்.

★ **சிங்கப்பூர்**
20 தாதிமார் (Nurse) தேவை.
சம்பளம் 15, 000/-

★ **ஜேர்மனி**
மற்றும் வேலை வாய்ப்புகளுக்கும் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் சந்திக்கவும்.

தொடர்பு:
**திரு. க. இந்திரலிங்கம் (சந்திரன்)**
**நிரோஷன் என்ரபிறைஸ்**
பருத்தித்துறை வீதி, மயிலிட்டி.
காங்கேசன்துறை.
(T. B. வைத்திய சாலைக்கு அருகில்) (1489)


## First Death Anniversary

13th: August 1989



S. Denis Sylvester

There is no death;
The Stars go down to rise
upon some other shore.
And bright in Heaven's Crown
They shine for ever more.

Fondly remembered by your loving wife, sons, daughters, son-in-law, daughter in-law and little grandson Beny who misses you so much.

76/2, Kandy Road,
Chundikuli, Jaffna: (11715)

நேரு கிண்ண கிரிக்கெட்:

# ஆஸி, மேற்கிந்தியதீவு அணிகள் இந்திய அழைப்பை நிராகரித்தன

புதுடில்லி, ஆக. 13

உலகச் சம்பியன்களான ஆஸ்திரேலிய அணியும் ஒரு நாள் போட்டிகளுக்குச் சிறந்து விளங்கும் மேற்கிந்திய தீவுகள் அணியும் நேரு கிண்ணத்திற்காக நடைபெறவுள்ள ஒரு நாள் கிரிக்கெட்போட்டியில் கலந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரித்துள்ளன.

இவ்வாறு இப் போட்டியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ள குழுவினர் தலைவர் ஜக்மோகன் டாள்மியா தெரிவித்தார்.

இந்தியாவின் முதலாவதுபிரதமமந்திரியான ஜவகர்லால் நேருவின் 100 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டே இப் போட்டி இந்தியாவில் நடைபெறவுள்ளது.

அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி முதல் நவம்பர் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இப் போட்டியில் கலந்து கொள்வது பற்றிய தமது உறுதியான நிலைப்பாட்டை இலங்கை, இங்கிலாந்து, பாகிஸ்தான் ஆகிய அணிகள் மட்டுமே தெரிவித்துள்ளன.

நவம்பர் மாதம் 5ஆம் திகதி கனடாவின் டொரன்டோ என்னும் இடத்தில் காட்சிக் கிரிக்கெட் போட்டி ஒன்றில் மேற்கிந்திய தீவுகள் அணி கலந்து கொள்ளவுள்ளதால் நேரு கிண்ணப்போட்டியை நிராகரித்துள்ளது.

நேரு கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ள காலப்பகுதியிலேயே ஆஸ்திரேலியாவில் உள்ளூர் போட்டிகள் நடைபெறும் காலம் என்பதால் ஆஸ்திரேலிய அணியும் மறுப்புத் தெரிவித்துள்ளது. (த-6)

## வலைபந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஆக 13

வலைபந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்றது.

கலாசாலை அதிபர் செல்வி. ச. சின்னப்புவின் அனுசரணையுடன் உடற்கல்வி விரிவுரையாளர் க. யதுகுலசிங் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சியில் 50 க்கும் மேற்பட்ட ஆசிரிய பயிலுநர்கள் பங்குபற்றினர்.

இவர்களுக்கான பயிற்சிகளை யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி திருமதி. ஏ. எவ். ஜே. ரூபசிங்கம் வழங்கினர்.

இப் பயிற்சி நெறிக்கான ஏற்பாடுகளைக் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுத்துறைஅதிகாரி மேற்கொண்டிருந்தார். (த-6)

## இருவர் விலகினர்

லண்டன், ஆக 13

பிலிப் டிபிரைட்ஸ், ரோலன்ட்புச்சர் ஆகிய இருவரும் தென் ஆபிரிக்கா செல்லவுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் குழுவிலிருந்து விலகிக் கொண்டனர். (த-6)

## நடிகமணி பற்றியதகவல்கள்

மறைந்த நடிகமணி வி. வி. வைரமுத்துவின் நாடகப்பணி குறித்து வரலாற்று நூல் ஒன்றை எழுதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவருடன் இணைந்து கலைப் பணியாற்றிய நடிகர்கள் மற்றும் கலைஞர்கள், நடிகமணி குறித்துத் தமக்குத் தெரிந்த தகவல்களைத் தந்துதவினால் பிரஸ்தாப நூலை முழுமையானதாக்க உதவியாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

இத்தகைய தகவல்களைத் தெரிவிக்க விரும்புவோர் கவிஞர் காரை செ. சுந்தரம் பிள்ளையுடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (அ)

## கூட்டம்

யாழ் மாவட்டத்தில் உள்ள கல்வி அதிகாரிகளுக்கான கூட்டம் ஒன்றுநாளை திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெறவிருக்கிறது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தலைமையில் கூட்டம் நடைபெறும். (உ-3)

# முறைசாராக் கல்வி இடத்துக்கும் பொருத்தமாக இருக்க வேண்டியது அவசியம்

வட்டுக்கோட்டை, ஆக 13

''எமது கல்லூரி அதிபர்கள் முறைசாராக் கல்வியின் முக்கியத்தை உணர்ந்து வட்டுக்கோட்டைக் கொத்தணியிலுள்ள ஒவ்வொரு பகுதிக்கும் பொருத்தமான கல்வியை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்',

அண்மையில் வட்டுக்கோட்டை கொத்தணி பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய கொத்தணி அதிபர் திரு. எஸ். டாஸ் மேற்கண்டவாறு கூறினர்.

வட்டுக்கோட்டைக் கொத்தணிப் பாடசாலைகள் அதிபர்கள் சங்கச் செயலாளராக வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் திரு. வ. யோகானந்தசிவம் நியமிக்கப்பட்டார். வட்டுக்கோட்டைக் கொத்தணிப் பாடசாலைகளின் உப அதிபராக வட்டு ஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர்திரு.எஸ், சிவவாகீசர் நியமிக்கப்பட்டுள்ளார். (க)

# துறவற வாழ்வில் 60 ஆண்டு கண்ட அருட் சகோதரர் கிறகறி பேணட்

இவ்வாண்டு ஆனித்திங்கள் 26ஆம் நாள் மன்னார் டிலா சால் இல்லத்தில் அருட் சகோதரர் கிறகறி பேணட் தனது துறவற வாழ்வில் 60 ஆண்டுகளை நிறைவு செய்யும் வைரவிழாவினைக் கொண்டாடினார் அன்றைய தினத்தில் அருட் சகோதரரின் உடல், உள நலன் வேண்டி எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருவிழாத் திருப்பலியானது புனித மரியாள் ஆலயத்தில் மன்னார் மறைவட்ட ஆயர் தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது:

அடிகளார், ஊனியாவிலுள்ள பாலிய கொட என்னுமிடத்தில் யோன். யூலியா தம்பதியர்க்கு 1908ஆம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 8ஆம் நாள் மகனாகப் பிறந்தார். இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் கொழும்புப் புறக்கோட்டையில் டி லா சால் சகோதரர்களினால் நடாத்தப்பட்டு வந்த புனிதமரியாள் பாடசாலையில் கிறகறி பேணட் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். இப்பாடசாலையில் கல்வி பயிலும் வேளையில் அங்கு பணியாற்றிய அருட் சகோதரர் அன்ரனியின் வழி நடத்துதலினால், டி லா சால் துறவற சபையில் முதற்படியினை எடுத்து வைத்தார்.

இவர் தனது துறவறக் கல்வியினை கொழும்பு 15இல் அமைந்துள்ள டி லா சால் சபையின் துறவற பயிற்சி நிலையத்தில் [illegible] இதன் பயனாக 1929ஆம் ஆண்டு துறவற வார்த்தைப் பாடுகளை எடுத்துச் சகோதரர் நிலையினை அடைந்தார்.



அருட் சகோதரர் கிறகறி பேணட்

அன்று அவர் இறைவனுக்கு அளித்த வாக்குறுதிகளை இற்றை வரைக்கும் காத்து, பிரமாணிக்கமுள்ள ஊழியனாகப் பணியாற்றியிருக்கின்றார்.

இச் சகோதரர் தனது லா சால் கொழும்பு - 15. ஊவாக்கல்லூரி பதுளை, புனித சவேரியார் மன்னார். போன்ற கல்லூரிகளில் உதவி ஆசிரியராகவும், விடுதிச்சாலைப் பொறுப்பாளராகவும், விளையாட்டுப் பொறுப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். தனது பாடசாலைப் பணி வாழ்வில் மாணவர்களை நல் வழிப்படுத்தி, அவர்கள் சமுதாயத்தில் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

இன்னும் சிறப்பாக கடந்த 16 வருடங்களாக மன்னார் பட்டினத்தில் தன்னால் இயன்ற முறையில் சமுதாயப் பணியாற்றி வருகின்றார். முதிர்ந்த வயதிலும் கம்பீரமாக ஹொண்டா ரக்ட் 50 இ சென்று நோயாளிகளைத் தரிசித்து, அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் அளிப்பது, முதியோருக்கு நற்கருணை ஆண்டவரை எடுத்துச் சென்று வழங்குவது, ஏழை மாணவர்கள் கல்வியில் முன்னேற பலவழிகளில் உதவி செய்து கொடுப்பது போன்ற இன்னோரன்ன பணிகளை தனது ஒய்வு காலத்தில் செய்து வருகின்றார்;

வைரவிழாவினைக் கண்டுள்ள அருட் சகோதரரின் பணி வாழ்வு மேன்மேலும் இறையன்பிலும், பிறரன்பிலும் சிறந்தோங்க டி லா சால் சபையினர் இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர். ★

**அருட் சகோதரர் யோ அகஸ்டின்**
டிலாசால் சபை மன்னார்

கடந்த காலப் பணி வாழ்வில் இலங்கையின் ஏனைய மறை மாவட்டங்களில் டி லா சால் சபையினரால் நடாத்தப்படும் கல்லூரிகளிலும் கல்விப் பணியாற்றியுள்ளமை பாராட்டத்தக்கது; குறிப்பாக புனித [illegible] மரியாள் சிலாபம், புனித டி

## கிளிநொச்சியில் பதற்ற சூழ்நிலை

யாழ்ப்பாணம், ஆக. 13

கிளிநொச்சி நகரப்பகுதியும், அதனை அண்டியுள்ள கணேசபுரம், திருநகர், ஜெயந்திநகர், 7ஆம் வாய்க்கால், உருத்திரபுரம் போன்ற கிராமப் பகுதிகளிலும் பதற்றம் கலந்த சூழ்நிலை காணப்படுகின்றது.

கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவரும் மோதல் சம்பவங்கள், சுற்றிவளைப்பு, தேடுதல்கள், இரவு வேளையில் இடையிடையே கேட்கும் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் என்பன காரணமாகவே பதட்டமான சூழ்நிலை காணப்படுகின்றது.

நகரப்பகுதியில் அநேகமாக நண்பகலுடன் சனநடமாட்டம் குறைந்து காணப்படுகின்றது. (அ-76)



## பூநகரி ப. நோ, கூ, சங்கம், பூநகரி வெற்றுச் சாக்கு கேள்விகோரல்.

மேற்படி எமது சங்கத்தில் கீழ்க்காண் விபரப்படியான வெற்றுச்சாக்குகள் கேள்வி கோரல் மூலம் விற்பனைக்குள்ளன: உரிய சாக்கு கேள்வி விண்ணப்பத்துடன்திரும்பப்பெறக்கூடிய வைப்புப்பணமாகரூபா100/- செலுத்தப்பட வேண்டும். வைப்புப்பணம் செலுத்தாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விகள் பொது முகாமையாளர், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி என்ற முகவரிக்கு 17-8-89 ஆம் திகதிக்கு முன்பதிவுத் தபாலிலோ அன்றி நேரிலேயோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்;

| | |
|---|---|
| 112 படி அரிசிச் சாக்கு | 2273 |
| 80 படி அரிசிச் சாக்கு | 892 |
| 67 கிலோ மாவுச் சாக்கு | 1528 |
| சீனிச் சாக்கு | 272 |
| பலரகச் சாக்கு | 333 |
| பைகப் | 187 |
| | 5485 |

இங்ஙனம்:
பொது முகாமையாளர்,
ப. நோ. கூ. சங்கம், பூநகரி.
(சி)3211)

திருநிறைச் செல்வி
**சுகன்னியா நவரட்ணம்** அவர்களின்
## அரை ஆண்டு கண்ணீர் அஞ்சலி

உனது அவலம் கேட்டு யாழ்ப்பாணப்
பெரு நகரமே இடியேறு கேட்ட
நாகம் போலானதம்மா!

இம் மாநிலத்தில் பெற்றோர் தாமிருக்க
தேசாதி தேசத்தில் உடன் பிறந்தோர் தாமிருக்க
உற்றார் உறவினர் தான் பலரிருக்க
ஊரவர் பலர் இங்கிருக்க
நீ பிரியக் காரணம்தான் என்ன?

வதிரி நகர் விநாயகனும் இங்கிருக்க
கார்த்திகை விரதமிருக்க நல்லூர் சென்றாயோ?

கலை பல பயின்றாய்
வீணையில் நாதம் மீட்டாய்
விளையாட்டில் வீராங்கனை யானாய்
இனி என்ன கலைபயிலச் சென்றாய் அம்மா?

மதியைப் பழிக்கும் முகத்தோய்
இனிய சுபாவம் மிக்கோய்
கருணை உள்ளம் கொண்டோய்
இந்தச் சின்ன வயசில் எங்கு சென்றாய்?

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
பல்கிப் பெருகி வாழி வாழி
என்று வாழ்த்த வேண்டிய நாவால்
நீ இந்த மண்ணில் வீழ்ந்த கதையை
எழுத எழுதுகோல் இடம் தருகுதில்லையே!

அந்தக் கார்த்திகேயனுடன் நீ
இரண்டறக் கலந்து விட்டாயோ?

உனது பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரர், சகோதரிகள்.

16, இலந்தக்குள ரோட்,
கொழும்புத்துறை.
13 - 08 - 1989 [11722]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மாலைதீவு அமைச்சர் சந்திப்பு

புதுடில்லி ஆக. 12

மாலைதீவு வெளியுறவு அமைச்சர் ஜமீல் நேற்று புதுடில்லியில் பிரதமர் ராஜீவ்காந்தியைச் சந்தித்து சார்க் அமைப்பு மாநாடு மற்றும் இருதரப்புப் பிரச்சினைகள் பற்றிப் பேசினார்கள் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## பர்மா நெருக்கடி

பாங்கொக் ஆக. 12

பர்மாவின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான ஆவுங்கி ராஜினாமா செய்துவிட்டார்.

ஜனநாயகத் தேசியக் கட்சியின் மீது நிதி சம்பந்தமான ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து திரு கியும் மற்றும் 12 பேரும் பதவி விலகினர். (எ)

● ஒரு லட்சம் துருப்புக்கள் பங்குபற்றும்

# பாகிஸ்தானின் மிகப் பெரிய இராணுவ ஒத்திகை இந்திய எல்லைப் புறத்தில் டிசம்பரில் நடைபெறும்

## புதுடில்லி அரசு உன்னிப்பாகக் கவனிப்பு

புதுடில்லி, ஆக 12

இந்த ஆண்டு டிசம்பரில் அல்லது ஜனவரியில் மிகப் பெரிய யுத்த ஒத்திகை ஒன்றை இந்தியாவின் எல்லைப் புறத்தில் பாகிஸ்தான் நடத்த விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'ஸர்பே - எ - மொமின்' (Zarbe - a - momin) என்று இந்த ஒத்திகைக்கு பெயரிடப்பட்டுள்ளது.

சுமார் ஒரு லட்சம் துருப்புக்கள் இரண்டு பிரிவுகளாக இந்த ஒத்திகையில் பங்குபற்றும்.

இந்த ஒத்திகை நடத்தப்படுவதின் நோக்கம், நாட்டைப் பாதுகாப்பதிலும் எதிரிகளைத் திருப்பித் தாக்குவதிலும் பாகிஸ்தான் படையினர் திறமையாக போரிட



பெனுஸிர்

தயாராக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதே என்று பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் மேர்ஸா அஸ்லம் பெக் தெரிவித்தார்.

இந்த ஒத்திகையில் போர் விமானங்களும் நவீன டாங்கிகளும் கலந்து கொள்ள உள்ளன.

பெரோஸ்பூர் மேற்கே 250 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செனுப் - சிந்து நதி ஓரத்தில் இந்த ஒத்திகை நடத்தப்படவுள்ளது.

ஒத்திகை நடத்தப்படும் இடத்திற்கு துருப்புக்கள் நகர்த்தப்படுவது அடுத்த மாதம் (செப்டம்பர்) ஆரம்பமாக உள்ளது.

### ஒப்பரேஷன் பிராஸ்டாக்ஸ்

1986-87இல் இந்தியா நடத்திய 'ஒப்பரேஷன் பிராஸ்டாக்ஸ்' Operation Brasstacks) போன்ற இராணுவ நடவடிக்கையை ஒத்ததாக பாகிஸ்தான் ஒத்திகை அமையவுள்ளது.

இந்திய ஒத்திகை அப்போது இருநாடுகளுக்கும் இடையே பதற்றத்தை ஏற்படுத்தியது.

பிரதமர் ராஜீவ் காந்தி தொலைபேசியில் அதிபர் ஸியா-உல்-ஹக்குடன் பேசி, அவரை புதுடில்லி வருமாறு அழைப்பு விடுத்ததைத் தொடர்ந்தே பதற்றம் தணிந்தது.

பாகிஸ்தானின் வருடஇறுதி ஒத்திகை குறித்து இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

### காஷ்மீர் எல்லையில்

1988 இல் 'ஒப்பரேஷன் ரொபாக்' (Operation Topac) என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை நடத்தி 'காஷ்மீரை' இந்தியப்பிடியில் இருந்து விடுவிக்க அதிபர் ஸியா முன்னர் திட்டமிட்டிருந்தார்.

பாகிஸ்தானின் தற்போதைய ஒத்திகை நடைபெறப் போகும் இடம் காஷ்மீரை அண்டியுள்ளதாக இருப்பதால், இந்திய தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# கோயிலுக்குச் சென்று ஊர்க்கதை பேசுவதா?

## காஞ்சி ஸ்வாமி கண்டனம்

காஞ்சிபுரம், ஆக. 12

கோயிலுக்கு செல்பவர்கள் சொந்தவிஷயம், பக்கத்து வீட்டு விஷயங்களைப் பேசக்கூடாது என்று காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் அறிவுரை கூறினார்;

ஜெயேந்திர ஸ்வாமிகளின் 55ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு காஞ்சிபுரம் காமாட்சிஅம்மன் ஆலயத்தில் பக்திப்பாடல்களை நிரந்தரமாக ஒலிபரப்பும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

கோபுரத்தின் உள்ளேநுழையும்போது இசையைக் கேட்க ஆரம்பித்தால மீண்டும் வெளியே வரும்வரை எல்லா இடங்களிலும் ஒரே இசையைக் கேட்கலாம்.

இதற்கானவிழா காமாட்சி அம்மன் கோயிலில் நடந்தது. ஜெயேந்திரர் முதலில் பொத்தானை அழுத்தி இசையைத் துவக்கி வைத்தார். முதலில் காமாட்சி அம்மன் சுப்ரபாதம் ஒலிபரப்பானது.

ஜெயேந்திர ஸ்வாமிகள் பேசியதாவது:

இசை என்பது மனிதனோடு இணைந்தது. கேள்வி, ஞானம் என்பது பழங்காலம்தொட்டு வந்துள்ளது.

ஒருவன் தனிமையில் ஒரு நூலைப்படிக்கும்போது அதன் தன்மையை முழுவதும் புரிந்து கொள்ளமுடியாது. சந்தேகம் இருந்தால் எதையும் தெரிந்து கொள்ள முடியாது.

அதையே ஒருவர் சொல்லிக் கேட்கும்போது அதன் பலன் முழுமையும் தெரிந்துகொள்ள முடியும்.

அதனால்தான் அந்தக்காலத்தில் மகாபாரதம், ராமாயணம் போன்றவைகளை உபந்நியாசம் மூலம் மக்களுக்குச் சொல்லிவந்தனர்,

ஒருவன் கண்ணால் எல்லாவற்றையும் பார்க்கமுடியாது. காதால் எங்கோ நடக்கும் பேச்சுக்களைக் கேட்கமுடியும். அதனால்தான் நல்லவைகளை மட்டும் காதால் கேட்கவேண்டும்.

கெட்ட சம்பவங்களையும், கெட்ட செய்திகளையும் காது மூலம் கேட்டதால்தான் வீடும், நாடும் கெட்டுப்போய் விட்டது.

கோவிலுக்கு வரும்போதாவது மக்கள் நல்லவைகளைக் கேட்கவேண்டும்.

கெட்ட செய்திகளை யாரும் கோவிலுக்கு வந்து பேசக்கூடாது. பக்தியை நினைக்க வேண்டும்; கடவுளின் பெருமைகளைப் பாடும் பாடல்களையும் ஸ்தோத்திரங்களையும் பொதுமக்கள் கேட்கவேண்டும்.

இசைமூலம் எப்போதும் நல்ல பலனை அடையலாம்.

இவ்வாறு ஜெயேந்திரஸ்வாமிகள் பேசினார். (எ-4)

## நெப்டியூனைச் சுற்றி இரு வளையங்கள்

லண்டன், ஆக. 12

வொயேஜ் 11 விண்கலம், நெப்டியூன் கோளைச்சுற்றி வரும் இரண்டு வளையங்களைக் கண்டுபிடித்திருக்கிறது. இந்த வளையங்கள் சந்திரனின் உடைந்த பகுதிகளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (க)

## பனமாவின் வேண்டுகோள்

தனது துருப்புக்களுக்கும் அமெரிக்கப்படைகளுக்கும் இடையே மோதல் ஏற்படுவதைத் தவிர்க்குமுகமாக இராணுவ அவதானிப்புக்குழு ஒன்றை அனுப்பும்படி பனமா அரகஐ.நா.பொதுச் செயலாளரைக் கேட்டுள்ளது. (எ)

## சென்னை விமான நிலையவெடிகுண்டு

# ஆயுள் தண்டனை பெற்றவர் மேன்முறையீடு செய்தார்

சென்னை ஆக. 12

மீனம்பாக்கம் விமான நிலைய வெடிகுண்டு வழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட எதிரிகளில் ஒருவரான பாலசுப்பிரமணியம் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருக்கிறார்.

மதுரையில் ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரான பாலசுப்பிரமணியம், கீழ்க் கோர்ட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்பு சட்டத்துக்கு முரணானது என்று தனது முறையீட்டில் கூறியிருக்கிறார்.

இதை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் எஸ். சிவசுப்பிரமணியம், டி. எஸ். அருணாசலம் ஆகியோர் எதிரியை பிணையில் விடுவித்து விசாரணையை வருகிற 14 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

# உலக கோடீஸ்வரர்கள் எண்ணிக்கை 198

உலகில் மிகப்பெரிய பணக்காரர்கள் 198 பேரில் இந்தியாவைச் சேர்ந்த பிர்லா குடும்பமும் ஒன்று என்று ஃபோர்பஸ் என்ற வாஷிங்டன் பத்திரிகை தெரிவிக்கிறது.

கடன் எல்லாம் போக சொத்து மதிப்பு 100 கோடி டாலர்களுக்கு மேல் (சுமார் 3, 600கோடிருபா) இருப்பவர்களின் பெயர்கள் மட்டும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

இந்தியாவில் உள்ள இன்னொரு பெரியதொழில் குடும்பமான டாட்டாக்களின்பெயர் இதில் இடம்பெறவில்லை.

இந்தியாவைப் போலவே வேறு 6 நாடுகளிலும் இதைப் போல தலா ஒரு கோடீஸ்வரக் குடும்பம் இருக்கிறது.

அமெரிக்காவில் உயர்ந்த அளவாக 55 கோடீஸ்வரர்களும், ஜப்பானில் 41 கோடீஸ்வரர்களும்மே.ஜெர்மனியில் 20 கோடீஸ்வரர்களும், கனடாவில் 9கோடீஸ்வரர்களும், சவூதி அரேபியா, தாய்வான் ஆகியவற்றில் தலா 5கோடீஸ்வரர்களும், சுவிஸ்லாந்தில் 4 கோடீஸ்வரர்களும் இருக்கின்றனர்.

இங்கு கோடீஸ்வரர்கள் என்று குறிப்பிடப்படுகிறவர்களுக்கு 100 கோடி டாலருக்கு மேல் சொத்து மதிப்பு இருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். (எ-4)

# சந்திரனுக்குப் போக விரும்பும் 93,000 பேர்!

வாஷிங்டன், ஆக 12

அமெரிக்காவிலுள்ள பான் ஆம் விமான நிறுவனம் முதன் முதலாக சந்திரனுக்குப் பயணிகளை அழைத்துச் செலல முன் பதிவு செய்து வருகிறது

இந்தப் பயணத்துக்காக சுமார் 93, 000 பேர் காத்திருப்போர் பட்டியலி உள்ளனர்.

வாஷிங்டன் போஸ்ட் என்னும் பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சந்திரனில் மனிதன் காலடி வைப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே இதற்கான பதிவு தவங்கியிருக்கிறது.

1964 ல் ஆஸ்திரிய பத்திரிகையாளர் ஜெரார்ட் பிஸ்டர் என்பவர் வியன்னா டிராவல் ஏஜென்சிக்குச் சென்று சந்திரனுக்குச் செல்லத் தமக்கு ஒரு டிக்கெட் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்தப் பயணம் இன்னும் பதினொரு வருடங்களுக்குப் பின் (அதாவது 2,000 இல் நடக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக பான் ஆம் செய்திகள் தெரிவிக்கின்றன.


## லொறி விற்பனை

எமது சங்கத்தின் 24/8619 இலக்க இசுசு லொறி கேள்விப்பத்திரங்கள் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. லொறியைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக ரூபா 500/- செலுத்துவதுடன் சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப்பத்திரம் ரூபா 25/- செலுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப் பத்திரங்கள் யாவும் 25-08-89 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக தலைவர், கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டுச் சேர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திரத்தின் மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் லொறிக்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

லொறியைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். கூடுதலான கேள்விக்காரருக்கே முன்னுரிமைவழங்கப்படும் கேள்விப் பத்திரத்தை ஏற்கும், நிராகரிக்கும் உரிமை சங்க இயக்குனர் சபைக்கு உண்டு.

பொது முகாமையாளர்,
கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

(சி/3286)


# ஜெயலலிதா சொல்வதற்கெல்லாம் தலையாட்ட மாட்டேன்!

## அ. தி. மு. கவில் இணைந்த பின் அளித்த பேட்டியில் வீரப்பன்

தமிழக அரசியலில் பிறந்த வீடு திரும்பி விட்டார் முன்னாள் அமைச்சர் இராம. வீரப்பன்.

இணைந்த அ. தி. மு. க. வில் மீண்டும் வீரப்பன் சேர்ந்து கொண்டதையே இது குறிப்பிடுகின்றது.

பரமவைரிகளாக ஜெயலலிதாவை தேர்தல் மேடைகளல் வசந்தசேனை என்றெல்லாம் பேசியவர்கள் பட்டியலிலே முக்கியமானவர் வீரப்பன்.

அப்படியானவர் ஜெயலலிதாவின் தலைமையை ஏற்கும் அளவு எப்படி மனம் மாறினார்?

இது பற்றிய விவரங்களை திரு. வீரப்பனே இந்திய ஆங்கில வார சஞ்சிகை த இல்லஸ்டிரேட்டட் வீக்லி'க்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

அதன் தொகுப்பு இங்கு தரப்படுகின்றது:

கேள்வி: ஜெயலலிதாவுடன் இணைந்து கொள்ள நீங்கள் முடிவு எடுத்ததற்குக் குறிப்பிடத்தக்க காரணம் உண்டா?

வீரப்பன்: நிர்ப்பந்த சூழ்நிலை காரணமாக மீண்டும் 'ஜெ' தலைமையிலான அ. தி. மு. க வில் சேர்ந்து கொண்டேன். விதி என்று கூடச் சொல்லலாம். இப்படி ஒரு தீர்மானத்தை நான் எடுக்கவும் அ தி மு. க. விலும் நூதனமான நிலைமை இருந்தது.

தேர்தலில் படுதோல்வி அடைந்ததும் ஜானகி அம்மா ஜெயலலிதா அணியுடன் இணைய முடிவு செய்தார். அவசரப்படாதீர்கள் என்று கூறினேன். அவர் அதனைக் கேட்கவில்லை இப்போது நிலை முற்றிலும் மாறியே விட்டது.

### நிலைமை மாறியவிதம்

கேள்வி: என்ன விதத்தில்?

வீரப்பன்: இணைப்பினால் எம். ஜி. ஆர் தொண்டர்கள் ஓரணியில் சேர்ந்துவிட்டனர். நானும் சேர்ந்துவிட்டால் அணி பலப்பட்டுவிடும் என்று அவர்கள் நினைத்தனர்.

நான் தயங்கினேன். ஜெயலலிதா என்னைச் சேர்த்துக் கொள்வாரா என்பது நிச்சயம் என்று நான் நம்பவில்லை. என்னைச் சேர்த்துக் கொள்வதற்கு அவர் எதிர்ப்பில்லை என்பதைப் பின்னரே தெரிந்து கொண்டேன்.

### கருத்து வேறுபாடு

கேள்வி: கடந்த காலங்களில் ஜெயலலிதாவிற்கும் உங்களுக்கும் இடையே நிலவிய வேறுபாடுகள் என்னவாயிற்று?

வீரப்பன்: ஜனநாயகக் கட்சிகளில் கருத்து வேறுபாடு ஏற்படுவது சகஜம்: அதில் தவறு ஏதும் இல்லை.

ஜெயலலிதாவை தனிப்பட்ட ரீதியிலோ, [illegible] ரீதியிலோ நான் [illegible] வில்லை.

அவர் நடிகை, நான் படத்தயாரிப்பாளர் - என்ற அளவில் எமக்கு இடையே சச்சரவுகள் முன்னர் நிலவி வந்தன.

### சிக்கல் தீர்ந்தவிதம்

கேள்வி; அ. தி. மு. க. வில்



நீங்கள் சேரவிரும்பினீர்கள். ஜெயலலிதாவும் உங்களைச் சேர்க்க விரும்பினார்:

எப்படிச் சிக்கலுக்குத் தீர்வு காணப்பட்டது?

வீரப்பன்: ஒருநாள் ஜெயலலிதா தொலைபேசிமூலம் என்னுடன் பேசினார். அ.தி.மு.க வில் சேரும்படி கேட்டுக் கொண்டார். கால அவகாசம் வேண்டும் என்று கேட்டேன்.

ஏன் தயங்குகிறீர்கள் என்று ஜெயலலிதா திருப்பிக் கேட்டார்.

## தமிழக அரசியல்

அ. தி. மு. க வில் எனது கௌரவம், பெருமை காப்பாற்றப்படுமா? என்று கேட்டேன்;

பின்னர் தொடர்பு கொள்வதாக அவர் கூறினார். தூதர் மூலம் பிறகு அனுப்பிய செய்தி ஒன்றில் 'அ.தி.மு.க ஸ்தாபகர்களில் நீங்களும் ஒருவர். ஆகவே கட்சியை சரியான பாதையில் செலுத்தக் கூடிய பதவியை நான் உங்களுக்குத் தருவேன்' என்று ஜெயலலிதா கூறினார்.

ஜூலை 13இல் நான் அ. தி. மு. கவில் சேருவதாக நான் அறிவித்தேன். ஜெயலலிதா என்னை துணைப் பொதுச் செயலாளராக நியமித்திருப்பதாக அறிவித்தார்.

கேள்வி: சுகயீனம் காரணமாக ஜெயலலிதா செயல்பட முடியாது போய்விட்டால், நீங்கள்தான் கட்சியை வழி நடத்துவீர்களா?

வீரப்பன்: [illegible]

இருந்து வெளியேறும் அளவுக்கு அவருக்கு நோய் இல்லை. அவர் சில மாதங்கள் தலைமறைவாக இருந்ததற்கு நோய் காரணமில்லை. முழங்காலில் முடக்குவாதத்தினால் மட்டுமே அவர் பீடிக்கப்பட்டுள்ளார். அவர் தலைமறைவாக இருந்ததற்கு வேறு காரணங்களும் உண்டு.

### தலைமறைவான காரணம்

கேள்வி: அவை என்ன?

வீரப்பன்: அரசியலில் ஜெயலலிதா துக்ககரமான அனுபவங்களை கண்டிருக்கிறார். சொந்த நலன்களுக்காக ஆதரவாளர்கள் சிலர் ஜெயலலிதாவின் முதுகில் குத்தி விட்டனர். அவர் ஒரு பெண் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அவர் ஓர் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி அல்லர்:

'நீங்கள் செய்வது சரி அல்லது தவறு' — என்று அவரைப் பார்த்துச் சொல்லக் கூடிய ஒருவர் அவருக்கு அருகில் இல்லை. எம்.ஜி. ஆரைப் பொறுத்தவரையிலும் இந்த நிலைதான் இருந்தது. நான் ஒருவன் தான் எம். ஜி. ஆரை பார்த்து அப்படிச் சொல்லக் கூடிய நிலையில் இருந்தேன்.

கேள்வி: அப்படி ஜெயலலிதாவுக்கும் அறிவுரை கூறுவீர்களா?

வீரப்பன்: அப்படியான தேவை வராது என்று நினைக்கிறேன்:

கேள்வி: அப்படி ஏற்பட்டால்...

வீரப்பன்: நிச்சயமாக 'நீங்கள் செய்வது சரி அல்லது பிழை' என்று நான் அவருக்குக் கூறுவேன். அவருக்கும் இது தெரியும்: அதனால்தான் கட்சியில் தனக்கு அடுத்த இடத்தை எனக்குத் தந்திருக்கிறார்.

கேள்வி: உங்களை கட்சியில் சேர்க்க ஜெயலலிதா உண்மையிலேயே விரும்பினாரா?

வீரப்பன்: ஆம். தன்னைச் சுற்றி இருப்பவர்கள் 'எதற்கும் ஆமாம்' போடுபவர்கள் தான் என்பதை ஜெயலலிதா உணர்ந்தார். அதனால்தான் ஒளிவு மறைவு இன்றி வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசும் என்னை அவர் விரும்பினார். (எ)

## 2,000 ஆவது ஆண்டில் 'ரோபோ' மனிதன்

லண்டன் ஆக. 12

2,000 ஆவது ஆண்டில் உலகில்ஒரு கோடி 'ரோபோ' இயந்திர மனிதர்கள் செயல்படுவர் என்று சர்வதேச தொழில் ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (எ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் பொன்னையா தேவதாசன்
(ஓய்வு பெற்ற கணக்காளர்)

உதயம்: 28-11-1927
அஸ்தமனம்: 14-07-1989

எமது அன்பின் தெய்வமே!
நோய் வேதனை தீர்ந்த பின்பும்
நீங்கள் எம்மையெல்லாம்
மறந்து விட்டுச் சென்றிடினும்
உங்கள் நினைவு எம்மை விட்டு
என்றுமே அகலாது.

உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

13-08-1989 இன்று ஞாயிற்றுக்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரது பிரிவால் மனம் வெதும்பி வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்

79, A. V. ரோட்,
கொழும்புத்துறை.

[1516]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவர்!
பல்கட்டுவதில் கைதேர்ந்தவர்!



P. I. பர்ணண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.

# உதயன்

13 ^8 1989 ஞாயிற்றுக்கிழமை

கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவர்!
பல்கட்டுவதில் கைதேர்ந்தவர்!



கிளை:
P. I. பர்ணண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனு வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.

## தனியார் கல்வி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை

யாழ்ப்பாணம் ஆக. 13

தனியார் கல்வி நிறுவனங்கள் கடந்த வாரம் முதல் இயங்கத் தொடங்கியுள்ளது. இது குறித்து தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கையின் விவரம் வருமாறு:-

தமிழ் மக்களின் சொத்து கல்வியே. தமிழ் சமுதாயம் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஆர்வமிழக்காது எமது சிறுவர் கல்வியைத் தொடர்ந்துவந்தனர். கல்லூரிகள் மூடியிருக்கும் இவ் வேளையில் அவர்களின் கல்வி இடையீடு இன்றி நடைபெறவேண்டும் என்ற பேரார்வத்தினுல் உந்தப்பட்டு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கடந்த வாரம் முதல் தமது நிலையங்களைத் திறந்து கல்விச் சேவையை நடத்துகின்றது.

கல்வி கற்பித்தலும் கற்றலும் அறிவு பூர்வமான ஒரு நிகழ்வு மட்டுமல்ல, உளவியல் ரீதியான தொடர்பையும் கொண்டது: அமைதியின்மை, பீதி, பயம் ஆகிய புறச் சூழ்நிலைகள் மாணவரின் உள்ளத்தைப் பாதிக்கின்றது. இவ் வேதனைகள் மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிப்பதோடு மட்டுமல்லாது சமுதாயத்தின் உள்ளக் குமுறலாகவே உருவெடுக்கும். எமது சிறுர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்துவிடும்.

தமது உழைப்பையும் உடைமையையும் தமிழ் மக்கள் இழக்கத் தயாராகவிருப்பது கல்வி ஒன்றுக்கேயாகும். அதனையும் இழந்தால் எல்லாவற்றையும் இழந்தவர் ஆவோம். தனியார் கல்வி நிலையங்களுக்கு இப்போதுதான் மாணவர்கள் சிறுகச்சிறுக வர ஆரம்பிக்கின்றனர்.

இந்நிலையில் அவர்கள் தமது கல்வியைத் தொடர பெற்றேர், ஆசிரியர், பொது ஸ்தாபனங்கள், அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகிய சம்பந்தப்பட்ட யாவரையும் எமது இச் சேவை தொடர தயைகூர்ந்து உதவுமாறு தாழ்மையுடன தனியார்கல்வி நிறுவன ஒன்றியம் வேண்டுகின்றது—என்று தெரிவிக்கப்பட்டுளளது.

## உலக்கையால் தாக்கப்பட்டவர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 13

உலக்கைத் தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்படும் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர்.

யாழ்ப்பாணம், கண்டிவீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மரணமானவர் சின்னத்துரை லயனல் கொன்ஸ்ரன்ரைன் என்பவர் எனத் தெரியவந்தது. (ஓ-9)

## 79 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஆக. 13

நேற்றுமுன்தினம் மாலையில் இருந்து தென்பகுதியில் பாதுகாப்புப்படையிரால் நடத்தப்பட்ட தேடுதலின் போது 79 தீவிரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று கொழும்பு மிகுந்து மாவத்தையில் பொதுமக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து 30 கிலோ வெடிமருந்துடன் கூடிய அலுமினியப் பாத்திரம் ஒன்றைப் பொலீஸார் கைப்பற்றினர்.

களுத்துறை மாவட்டத்தில் துப்பாக்கிகள் வைத்திருந்த ஐந்துபேரை பொலீஸார் கைது செய்தனர். (உ-எ)

## பொலிஸ் நிலையங்கள் மூலம் தற்காலிக அடையாள கார்ட் வழங்குவதற்கு முடிவு

கொழும்பு, ஆகஸ்ட் 13

தீவிரவாதிகளிடம் தேசிய அடையாளக்கார்ட்களைப் பறிகொடுத்தவர்களுக்கும் தொலைத்தவர்களுக்கும் தற்காலிக தேசிய அடையாளக் கார்ட்களை வழங்க நடவடிக்கைஎடுக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.

கிராமசேவையாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படத்தை பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்தவுடன் தற்காலிக தேசிய அடையாளக் கார்ட் வழங்கப்படும்.

தற்போது புழக்கத்தில் உள்ள தேசிய அடையாளக் கார்ட் 20 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்டது. இவற்றிற்கு பதில் புதிய அடையாளக் கார்ட்கள் அனைவருக்கும் வழங்கப்படவுள்ளன. ஆகவே தான் அதுவரை தற்போதைய அடையாளக் கார்ட்களை பறிகொடுத்தவர்களுக்கு தற்காலிக கார்ட்களை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

— இப்படி அமைச்சர் விஜேரத்ன தெரிவித்தார். (உ-எ)

## விலை உயர்வு

சீனியின் மொத்த விலையை ஒரு கிலோ 25 சதத்தினுல் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் நேற்று முன்தினம் முதல் அதிகரித்துள்ளது.

ஆனுல் கூ. மொ. விற்பனை நிலையங்களில் சில்லறை விலை கிலோ 23 ரூபாவாகவே இருக்கும் என்று கூ. மொ. வி. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி கொழும்பில் சீனியின் மொத்த விலை 22 ரூபா 25 சதத்தில் இருந்து 22 ரூபா 50 சதமாகவும், வெளிமாவட்டங்களில் 22 ரூபா 35 சதத்தில் இருந்து 22 ரூபா 60 சதமாகவும் அதிகரிகும். (உ-எ)

## 12 பேருக்கு.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாசிக்கப்பட்ட போது வெளியே குழுமியிருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்

தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஜனுதிபதிக்கு மேன்முறையீடு செய்ய முடியும்.

1978 இல் பதவிக்கு வந்த ஜனுதிபதி மாமுன் கயூம் இரண்டு தடவைகள் சதிமுயற்சியில் இருந்து தப்பினுர். (உ-எ)

## இந்திய ராணுவ சீருடைகள் தென்னிலங்கையில் மீட்பு?

### விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன

கொழும்பு. ஆகஸ்ட் 13

தென்னிலங்கைத்தீவிரவாதிகளின் மறைவிடம் ஒன்றிலிருந்து இந்திய இராணுவத்தினரின் சீருடைகள் படையினரால் கைப்பற்றப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து இந்தியப் படை ஜவான்களின் சீருடைகள் எவ்வாறு தென்னிலங்கை தீவிரவாதிகளிடம் வந்து சேர்ந்தன என்பதை அறிந்துகொள்ளும் வகையில் பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளார்கள்.

கண்டி, தொடன்வெல்ல என்ற இடத்தில் படையினரும், பொலீஸாரும் கடந்த வாரம் கூட்டாக தேடுதலில் ஈடுபட்டிருந்த போதே தீவிரவாத மறைவிடம் ஒன்று முற்றுகையிடப்பட்டது.

இங்கு அரச விரோத பிரசுரங்கள், தோட்டாக்கள், பதாகைகள் ஆகியவற்றைக் கைப்பற்றிய படையினர் இந்திய ராணுவசீருடைகள் வைக்கப்பட்டிருந்ததையும் கண்டு பிடித்தனர்.

கண்டியில் கைது செய்யப்பட்ட மூன்று தீவிரவாதிகள் தெரிவித்த தகவல்களின் பேரிலேயே இத்தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது.

இந்திய ஜவான்களின் சீருடைகள் தெற்கில் கைப்பற்றப்பட்டது தொடர்பான செய்தி கடந்த 10 ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

## ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி

யாழ்ப்பாணம், ஆக. 13

ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் 31ஆம் திகதியாகும்.

கல்வி அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் தற்போது பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன:

முதல் தடவை பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளின் விண்ணப்ப படிவங்களை உடனடியாக பூர்த்தி செய்து அனுப்பும்படியும்.

இரண்டாம் முறை பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை இம் மாதம் 31ஆம் திகதிக்கு இடையில் அனுப்பும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆதலால் மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-76)

## கொழும்பு ஆஸ்பத்திரியில் வேலை நிறுத்தம்

இரண்டு ஊழியர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து கொழும்பு பெரியாஸ்பத்திரியின் ஒரு பிரிவு ஊழியர்கள் நேற்று முன்தினம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

'வேலை நிறுத்தம் குறித்து யாருடன் பேச்சு நடத்துவது என்று தெரியாமல் இருக்கிறது. ஒருவரும் நடைபெற்ற சம்பவம் குறித்து முறையிடவே இல்லை' — என்று ஆஸ்பத்திரி சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சொன்னுர்.

இந்த வேலை நிறுத்தத்தை குழந்தைகள் ஆஸ்பத்திரி மற்றும் கண் ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கும் விஸ்தரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. (அ-எ)

## ராணுவச் சிப்பாய் மீட்கப்பட்டார்

கொழும்பு, ஆக; 13

பொலன்னறுவ மாவட்டத்தில் கலல்லே என்னும் இடத்தில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் மீட்கப்பட்டார்.

சிவில் உடையில் இருந்த இரண்டு இராணுவத்தினர் கடந்த புதன்கிழமை கடத்தப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் எப்படியோ தப்பிச்சென்று மன்னம்பிட்டி இராணுவ முகாமில் தகவல் கொடுத்தார்.

அதனையடுத்து. இராணுவத்தினர் தேடுதல் நடத்தினர். அப்போது கடத்தப்பட்ட மற்ற இராணுவசிப்பாய் மீட்கப்பட்டார். அவருடன் இருந்த சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா சுப்பிரமணியம்

நுணுவில் மேற்கு 190 ஆம் கட்டையடியைச் சேர்ந்த திருமதி சின்னம்மா சுப்பிரமணியம் 11-8-89 இல் காலமானுர்.

இவர் காலம் சென்ற இளைப்பாறிய ஆசிரியர் சின்னத்தம்பி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, இராசேஸ்வரி, இரத்தினேஸ்வரி (இலண்டன்), கமலேஸ்வரி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. காசிப்பிள்ளை நாகராசா (தபால் அதிபர்), ஆறுமுகம் கனகசுந்தரம் (ஜவுளி பிறதர்ஸ்), டாக்டர் கனகசபை கதிர்காமநாதன் (இலண்டன்), எஸ். சுந்தரமூர்த்தி (இலண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும், இல்லைநாதன் சுந்தரேஸ்வரன் (கனடா), திருமதி லேணுகா சுந்தரேஸ்வரன் (கனடா), சுப்பிரமணியம் (ஈசன்), தர்சினி, சுகிர்தராஜா, பாலினி, அரவிந்தன், சபேசன், சேந்தன், உமாலினி, தனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சஜந்தனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் நுணுவில் இல்லத்தில் இன்று 13-08-89 மாலை 3.00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நாகேஸ்வரி நாகராசா.

நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி.

(1386)

### திருவாளர் வைத்திலிங்கம் மாப்பாணபிள்ளை (ஓய்வுபெற்ற விதானையார்)

ஓய்வுபெற்ற விதானையாரும், வன்னிவிளாங்குளம் முத்துமாரியம்மன் கோவில் பிரதம அர்ச்சகருமாகிய திருவாளர் வைத்திலிங்கம் மாப்பாணபிள்ளை 12-08-89 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னரது இறுதிச்சடங்குகள் 14-08-1989 திங்கட்கிழமை வன்னிவிளாங்குளத்தில் நடைபெறும் என்பதை உற்ருர், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறேம்.

தகவல்:
குடும்பத்தினர்

[11728]

### திருமதி சிவகுருநாதன் வள்ளிநாயகி

திருமதி சிவகுருநாதன் வள்ளிநாயகி சிவபதமடைந்தார்;

இவர் காலஞ்சென்ற சண்டிலிப்பாய் ஆறுமுகம் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற திரு. சிவகுருநாதன் (Probation Dept.) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்: இவர் தியாகராஜன் (Engineering Components Ceylon Ltd. Colombo), றஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமாரனின் (Buildings Dept., Jaffna), மாமியாரும், சபந்தனின் பேத்தியும், காலஞ்சென்ற குமாரசாமி (முன்னுள் கிருப்பர், திறைசேரி], காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (முன்னுள் கிருப்பர், இலங்கை வங்கி), முருகமூர்த்தி (சீமெந்து கூட்டுத்தாபனம் K. K. S.), தெய்வநாயகி, ரவீந்திரன் (யாழ். போதனு வைத்தியசாலை), சகாதேவன் (ப. நோ. கூ. ச. மானிப்பாய்), சாவித்திரி (உப தபால் அதிபர், சண்டிலிப்பாய்), பரந்தாமன் (Darley Buttler and Company Ltd. Jaffna Representative) ஆகியோரின் சகோதரியுமாவார்.

இறுதிக்கிரியைகள் அன்னரது இல்லத்தில் 13-08-89 இன்று காலை 9-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கு: சிவகுமாரன்
(1492)

வாரிசிமாதேவி,
அளவெட்டி வடக்கு.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி கத்தரின் (கலா) அழகராஜா

மலர்வு: 28 - 4 - 1963
உதிர்வு: 14 - 7 - 1989

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், அன்பின் ஊற்றாய், அறிவுச் சுடராய், பாசத்தின் உறைவிடமாய் எம்மிடையே கலகலத்துச் சிரித்த உன் பூமுகம் காணுது தவிக்கின்றேம்.

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு ஒரு கணத்தில் அணைந்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே! இந்நாளில் அல்ல எந்நாளுமே உங்களை மறவோம்: உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேம்.

கணவன், பிள்ளை, மாமா, மாமிமார், ஒன்றுவிட்ட சகோதரர்கள், மைத்துனர்மார், மைத்துனிமார், உறவினர்.


நாவற்குழி கிழக்கு,
கைதடி.

(11727)

எமது புதிய வெளியீடு

உங்கள் சத்தியராஜ் - ராதா - S-S. சந்திரன்
நடித்த
பிக்பொக்கட்
(தரமான பிரதி)

வீடியோ விமல்,
117, மானிப்பாய் வீதி, ஐந்துசந்தி (மேல் மாடி,
யாழ்ப்பாணம்.
(11729)




இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 - 08 - 1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org